# சுடர்

கலை இலக்கியத் திங்கள் இதழ்




ஆவணி - 1976

விலை ரூபா 1-00

# வாசகர் வாய்மொழி

தமிழ் மக்களில் தீவிர ஆஸ்திகர்களும் இருக்கிறார்கள். — தீவிர நாஸ்திகர்களும் இருக்கிறார்கள். ஆஸ்திகத்துக்கு மட்டுமன்றி நாஸ்திகர்களின் கருத்துக்களுக்கும் சுடரில் இடமளியுங்கள்!

— தெ. சிவனேசன், சங்கானை.

* தாராளமாக இடமளிப்போம் — ஆர்

* * *

கே. எஸ். ஆனந்தனின் தொடர் நாவலில் இடம்பெறும் வேறு நல்ல காட்சியொன்றினை சென்ற சுடரில் அட்டைப்பட ஓவியமாக்கியிருக்கலாமே! சுடரும் இனக்கவர்ச்சி வலைக்குள் விழலாமா?

— பி. மாணிக்கவாசகம், வவுனியா.

* * *

சுடரில், நாடகம் நடனம், நாட்டியம் போன்ற கலைநிகழ்ச்சிகளையும் விமர்சனம் செய்யுங்கள்!

— மு. விமலேசன், தெஹிவளை'

* * *

தமிழச்சி என்ற சொல்லுக்குப் பதிலாக தமிழினி என்ற சொல்லைப் பயன்படுத்தியிருக்கலாமே!

— பொன். பூலோகசிங்கம், கொழும்புவளாகம்.

* புரட்சிக்கவிஞர் பாரதிதாசனும் அவரது குருவான பாரதியும் தமிழனுக்கு பெண்பாலாக தமிழச்சியென்ற சொல்லையே கையாண்டுள்ளனர். 'தமிழினி' என்ற பெயர் பொருத்தமா என்பதை தமிழறிஞர்கள் தான் முடிவு செய்யவேண்டும்.

* * *

ஆடி இதழில் 'தேனாடு' இனித்தது. பந்திக்குமுந்து படைக்குப்பிந்து' எனும் முதுமொழிக்கு அருமையான விளக்கத்தைத்தந்த சின்ன ராமலிங்கத்திற்கு ஒரு சபாஷ்!

— எம். எஸ். மணி, பம்பலப்பிட்டி.

* * *

சென்ற சுடர் ஆசிரியர் தலையங்கத்தில் 'தவற்றை' எனும் சொல், 'தவறை' எனத் தவறாக இருமுறை வெளிவந்துள்ளது; தயவு செய்து தமிழின் மரபையும் பேணுங்கள்!

— மு. வைத்திலிங்கம், உரும்பிராய்.

சென்ற ஆடித் திங்கள் சுடரில் மூன்று இடங்களில் எழுத்துப்பிழைகள் காணப்பட்டன; இனிமேலாவது எழுத்துப்பிழைகளின்றி சுடர் ஒளி விடட்டும்!

— அல்வை தர்மநாதன், உருத்திரபுரம்.

* * *

'குமுதத்தின் திமிர்' என்ற தங்கள் ஆனி மாதச் சுடரின் கூற்றுக்கு மறுப்பாக பலரும் எழுதியிருந்ததை ஆடிச் சுடரில் அழகாகப் பிரசுரித்து விட்ட உங்கள் பெருந்தன்மைக்கு நான் நன்றி கூறுகிறேன். எத்தனையோ தமிழ் பத்திரிகைகள் இலங்கையிலும், இந்தியாவிலும் வெளிவருகின்றன. அவைகளைவிடச் சுடரின் தமிழ் மிகவும் நன்றாகத் தான் இனிக்கின்றது. இதற்காகவே சுடருக்கு எவ்வளவோ வாழ்த்துக்கள் கூறலாம்.

— கதிர் தம்பிராஜா, மட்டுநகர்.

* * *

ஆடிச் சுடரினிலே கே. எஸ். ஆனந்தனின் "சாத்தான் வேதம் ஓதுகிறது" என்ற தொடர்கதையைக் கண்டு பெருமகிழ்ச்சி அடைந்தேன். இருந்தபோதிலும் இன்னும் ஒரு பக்கத்தை கூடப் பிரசுரித்தால் நன்றாக இருக்கும்;

— பா. பாலசூரியன், வடஅளவை.

* * *

மறுபிறவியிலாவது தமிழச்சியாக பிறந்து தமிழ்மொழியை பேசுவேன் என்று கனேடிய நங்கை பிரலாபித்ததை படிக்கும்போது இதயம் பெருமிதத்தால் பூரிப்படைகிறது. மறுபிறவி என்பதுபற்றி பெரும்பாலும் ஆசிய நாட்டினர் தான் பேசிவருவதை அறிவோம். அப்படியிருக்க, செல்வி றிஸ்லா தமிழ்மொழி மேல் கொண்ட அபார அன்பினால், பற்றுதலினால் மறுபிறவியை நாடியிருக்கிறாரோ என்றும் எண்ணத்தோன்றுகிறது. அவரைச்செவ்வி கண்ட செம்பியன் சி. வி. க்கும், அதை சுடர்' வாசகர்களுக்கு விருந்தாக கொடுத்த கோவை அண்ணாவிற்கும் நன்றிகள்!

— பவன், திருமலை.

* * *

தமிழக பத்திரிகைகளை இங்கு வரவிடாமல் தடைசெய்தால்தான் எமது நாட்டு பத்திரிகைகள் வளரும், விற்பனையாகும் என்ற வறட்டு முற்போக்குவாதிகளின் ஒப்பாரிகள் எல்லாவற்றையும் பொய்யாக்கி தமிழ்பேசும் மக்கள் இல்லமெல்லாம் வீறுநடைபோட்டு 'சுடர்' பல்லாண்டு வாழ்க.

— சி. செல்வநாதன், அக்கரைப்பற்று 7.

* * *

அருமையான அட்டைப்படம்; படிக்கப் படிக்கப் பரவசமூட்டும் பதில்கள்; வளர்ந்து வரும் இளம் எழுத்தாளர்களை மென்மேலும் வளரவைக்கும் சுடருக்கு என் வாழ்த்துக்கள் உரித்தாகுக!

— கே.கே. சண்முகம், முனமடு.

M. Thanapalasingam.



# தேனாடு

ஸ்ரீ உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன்

ஆரெழில் வயல் மண்ணில்
நாள்தோறும் இயங்குபல்
பொறிகள் ஆர்க்கும்
பேரணியாய்ச் செல்லும்
நெல்வண்டிகள் ஓர் பால்
ஒலி பெருக்கும்
ஊரெலாம் நெல்குற்றும்
ஆலைகள் பேரோசை
ஒன்று கேட்கும்!
சீரழகு மண்ணின்
வள மோசை வடிவத்தில்
சிந்தும் நாடு!

வளஞ்செறி மருத மண்
இடைத்துயர் இலா நிறை
மனத்திரைப் போல்
களஞ்சியச் சாலைகள்
ஓர் புறம் கால்நீட்டிப்
படுக்கும் கண்டீர்!
குளஞ்சீர் மழைதாங்கி
நிறைந்தாற்போல் ஊர்செல்வம்
கொண்டிருக்கும்!
உளஞ்சிறந்தோர் நஞ்சை
உழவர் பெருஞ்செல்வர்
உடைய நாடு!

ஈடிலா ஒந்தாச்சி
மடத்து வெண்கலப் பானை
அடுப்பிலேற்றி
மூடி அவித்த கைக்
குத்தரிசிச் சோறும்
அமுதத்தோடு
தாடிமட்டிருல் வாங்கி
ஆணம் சமைத்துத்தாம்
உண்ட பின்னே
போடிமார் இல்லத்தில்
தயிர்ச்சோறு பூனைக்கு
வைக்கும் நாடு!

முட்காட்டை வயலாக்கி
நெல்லாக்கி முத்தான
அரிசியாக்கி
தைக்கோல விழாவாக்கி
தமக்குணவாக்கித்தீன்
தவிர்ந்த நெல்லை
பொற்காசாய் ஆக்கி இப்
பொன் வாழ்வைக் கவியாக்கிப்
பொறித்துவைக்க
வைக்கோலும் கடதாசி
ஆக்கி மக்கள் வாழும்
வளமார் நாடு!

மாமணிக் கழனியை
வளைத்துக்குலைவாழை
வேலி நிற்கும்
பாமழைக் குயிலோடும்
மாமரம் வயலெழில்
பாடி ஆடும்!
பூமகள் பாதத்தில்
வேர்ப்பலா பழம் வைத்து
பூசை செய்யும்
தேமதுரக் கனி
தீஞ்சுவை முக்கனி
திகழும் நாடு!

தவளைக் கடை மழை
தப்பாமற் பெய்தலால்
வயல் தழைக்கும்
குவளைக் கடை விழி
மாதர் பொன்மேனி போல்
நெல் குலுங்கும்
புவனக் கடைகள் எங்
கணும் நெல் கிடைக்காமல்
போய் விட்டாலும்
சவளக் கடையில் நெல்
கிடைக்குமென்றுூர் மக்கள்
சாற்றும் நாடு!

—வளரும்

# ஐயம் அகற்று



சி. கணேசமூர்த்தி,
மாங்குளம்.

கே: மறைந்த ஈ. வெ. ரா. பெரியாரிடம், அறிஞர் அண்ணுவைப்போலல்லாது முரட்டுத்தனமான பிடிவாதங்கள் அதிகம் இருந்தது என்கிருர்களே உண்மையா?

ப: உண்மைதான்; பெரியார் அவர்கள் சொல்லவேண்டியதை பச்சையாக அப்படியே சொல்லிவிடுவார்; அண்ணுவோ, அதை தமக்கேயுரிய பாணியில் நாசூக்காகக் கூறுவார்! பெரியார் ஒன்றைச் சொல்லும்போது பிறருடைய மனம் புண்படுமேயென்று கவனிக்கமாட்டார்; அண்ணுவோ எதையும் பிறர்மனம் புண்படாமற் செய்யவேண்டுமென்பதிலே அக்கறைகாட்டுவார்!

கே: அன்று ரோமுடனும் கிரீசுடனும் பரக்கலத்திலே சென்று வாணிபம் செய்த தமிழன் இன்று கள்ளத்தோணி யென்று அழைப்படுவதேன்?

ப: அன்று ஆட்சி செய்தான்; இன்று வீழ்ச்சியுற்ருன்! இதுவே காரணம்!

* * *

சு. சுதாகரன்,
முறக்கொட்டாஞ்சேனை.

கே: ஈழத்தில் எத்தனை தமிழ் திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன?

ப: ஒரு படத்தின் பெயர்கூட நினைவில் நிற்க மறுக்கிறதே!

* * *

க. சுப்பிரமணியம்,
கொழும்பு-6.

கே: பொருமை ஏன் ஏற்படுகிறது?

ப: பொருமை ஏற்படுவதற்கு கார காரணம் எதுவும் கிடையாது அது எங்கும், யார்மீதும் எப்போதும் ஏற்படலாம்; அதற்கு வயதோ, அந்தஸ்தோ கிடையாது! மனிதமனத்தின் மிகப்பெரிய பலவீனங்களில் பொருமையே பொல்லாதது.

* * *

பு. சீர்மாறன்,
உரும்பராய்.

கே: மதுவையும், மங்கையையும் இருகண்ணெனக் கருதும் கண்ணதாசன் "அர்த்தமுள்ள இந்துமதம்" எழுதப் புறப்படலாமா?

ப: தாசிவீடே கதியெனக்கிடந்த அருணகிரிநாதர் திருப்புகழ் பாடலாமா?

* * *

சி. லிங்கமயம்,
சித்தங்கேணி.

கே: தேசத்துரோகிகள் என்று யாரை அழைக்கலாம்?

ப: ஒரு தேசம் விடுதலைக்குப் போராடும்போது அதைக் காட்டிக்கொடுப்போரை!

* * *

தா. ம. மனோகரன்,
நெடுங்கேணி.

கே: உதட்டில் தேனையும் உள்ளத்தில் நஞ்சையும் வைத்துப் பழகுபவர்களை எப்படி அழைப்பீர்கள்?

ப: என் இனிய நண்பர்களே என்று அழைப்பேன்!

கே: கவலை இல்லாத மனிதன் யார்?

ப: இன்னும் உலகில் பிறக்காதவன்!

* * *

கோ. கிருஸ்யந்தன்,
மீசாலை தெற்கு.

கே: கலைக்கும் அரசியலுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: அரசியலும் ஒரு கலைதான்! ஆனல் கலை கவலையைத் தீர்க்கும்; அரசியல் கவலையைச் சேர்க்கும்!

கே: நீங்கள் எப்போதாவது பொறுமையை இழந்தது உண்டா? அளவுக்கு மீறி ஆனந்தப்பட்டது உண்டா?

ப: எனக்கிருக்கும் பலவீனமும் பலமும் நான் கடைப்பிடிக்கும் அளவுக்கு விஞ்சிய பொறுமையே! அளவுக்கு மீறிய ஆனந்தத்தை எனது வாழ்க்கையில் நான் இதுவரை அனுபவித்ததில்லை!

* * *

என்-மீராசாஹிப்,
காததான்குடி.

கே: இலங்கையில் அதிகரித்துவரும் ஜனத்தொகைப் பெருக்கத்தை குறைப்பது எவ்வாறு?

ப: தமிழ் சினிமாப்படங்கள் பார்ப்பதையும் சினிமாப்பாடல்கள் கேட்பதையும் கைவிட வேண்டும்!

எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும்
அப்பொருளின் மெய்ப்பொருள் காண்பதறிவு

வள்ளுவராண்டு 2007
ஆனி 1976
சுடர் இரண்டு
ஒளி நான்கு

சுடர்
CHUDAR

# உலகநாடுகள் உற்றுநோக்குகின்றன!

கூட்டுச்சேரா நாடுகளின் உச்சி மாநாடு கொழும்பில் நடைபெற்று முடிந்துவிட்டது!

உலக சமாதானம் பற்றியும், நாடுகளிடையேயும் இனங்களிடையேயும் நல்லெண்ணம் நிலவவேண்டிய அவசியம் பற்றியும் மாநாட்டில் பல தலைவர்களும் முழக்கமிட்டார்கள்!

ஆனல் எந்த இலங்கையின் தலைநகரில் நின்று அவர்கள் இவ்வாறு முழக்கமிட்டார்களோ—அதே இலங்கையில் சமாதானம் நிலவவில்லையென்பதையும்—தமிழ் மக்கள் எரிமலையெனக் குமுறிக் கொந்தளித்துக் கொண்டிருக்கிருர்கள் என்பதையும் அவர்கள் உள்ளூரத் தெரிந்துகொண்டிருப்பார்கள்!

தென்னுபிரிக்காவின் இனவெறியையும், ருேடீசியாவின் இனத்துவேஷத்தையும் கடுமையாகச் சாடிய அதே வேளையில்—ஈழத்தமிழ் இனத்தவர்களுக்கு எதிராக இங்கு கடைப்பிடிக்கப்படும் குறுகிய சிங்கள, பௌத்த, இன, மதவெறியையும் இனவாதத்தையும்—வெளிப்படையாகவில்லாவிட்டாலும்—மனத்துக்குள் சாடியிருப்பார்கள்!

ஏகாதிபத்தியத்தையும் காலனித்துவத்தையும் கண்டித்து முழக்கமிட்ட நேரத்தில்—ஈழத்தமிழ் இனத்தின்மீது சிங்கள பௌத்த ஏகாதிபத்திய ஆட்சி இங்கு திணிக்கப்படும் நிகழ்ச்சியை அவர்கள் எண்ணிப்பார்த்திருக்காமலிருந்திருக்க முடியாது!

இனங்களின், நாடுகளின், இறைமை, சுதந்திரம் பற்றியும் விடுதலை இயக்கங்களுக்கு உதவவேண்டிய அவசியம் பற்றியும் அவர்கள் கருத்துரை வழங்கிய நேரத்தில் — ஈழத்தில் தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையும் இறைமையும் மறுக்கப்படுவதைப்பற்றியும் அவர்கள் சிந்திக்காமலிருந்திருக்கமுடியாது!

தமிழ் ஈழத்தின் விடுதலைக்குப் போராடிய தமிழ் இளைஞர்கள் 'பயங்கரவாதிகள்' 'நாட்டுக்கு ஆபத்தானவர்கள்' என்று பட்டம் சூட்டப்பட்டு, விசாரணையின்றி சிறைக்குள் தள்ளப்பட்டு ஆண்டுக்கணக்காக அங்கு நலிந்துகொண்டிருக்கின்ற நிலையில்—சிறிமா அம்மையாரையும் முன்னுக்கு வைத்துக்கொண்டு "**தமது இழந்த நாட்டை விடுவிக்கப் போராடுபவர்கள் பயங்கரவாதிகள் அல்ல; அவர்கள் உண்மையான விடுதலை வீரர்கள்; விடுதலை இயக்கங்கள் எங்கு இருந்தாலும் அவற்றுக்கு நான் உதவுவேன்**" என்று லிபியா ஜனதிபதி கேணல் கடாபி முழக்கமிட்டிருக்கிருர்.

அம்மையாருக்கு மனச்சாட்சியென்று ஒன்று இருக்குமானல் கேணல் கடாபியின் பேச்சு அதை உறுத்தியிருக்கும்! ஆனல் மனச்சாட்சிதான் அம்மையாரிடம் இல்லையே!

உள்நாட்டில் மிகமோசமான சிங்கள பௌத்த இனமத வெறியையும், ஏகாதிபத்திய உணர்வுகளையும் வளர்த்துக்கொண்டு—தமிழ் ஈழத்தின்—தமிழ் தேசிய இனத்தின் இறைமையையும் சுயநிர்ணய உரிமையையும் நசுக்கிக்கொண்டு, அதை மறைத்து இரும்புத்திரை போட்டு மாநாட்டை ஒருவாறு ஒப்பேற்றிவிட்டார் அம்மையார்!

உலக விடுதலை இயக்கங்களுக்கு உதவிபுரிய பிரதிக்ஞை எடுத்திருக்கும் கூட்டுச்சேரா இயக்கத்தின் புதிய தலைவியாராக தெரிவுசெய்யப்பட்டுள்ள இலங்கைப் பிரதமர், கூட்டுச்சேரா இயக்கத்தின் கொள்கையை காற்றில் பறக்கவிட்டு தமது சொந்த நாட்டில் விடுதலை கோரும் தமிழ் தேசிய இனத்தின்மீது தொடர்ந்து அடக்குமுறையை ஏவிவிடப்போகிருரா அல்லது அவர்களது கோரிக்கைக்கு இணங்கி கூட்டுச்சேரா இயக்கக் கொள்கையை காப்பாற்றப் போகிருரா?

இதனையே உலகநாடுகள் இப்போது கவனித்துக்கொண்டிருக்கின்றன.

# தமிழ்த்தாயின் திருமகன்

தறிகெட்டுப்போன ஈழத் தமிழ் மக்களின் காவலன் — தமிழ் மாநிலமெங்கும் முழங்குகின்ற நாவலன் — நெறிகெட்டுப் போன நீசர்களின் மேவலன் — நீதி கோரும் தமிழ்த்தாயின் ஆணை தாங்கும் ஏவலன் — அமிர்தலிங்கம். அண்ணனின் நாற்பத்தொன்பதாவது அகவை நிறைவு குறித்து அகம் மகிழவா அன்றி அங்கலாய்க்கவா?

**பெருமகன்:**

எம் இன விடுதலைக்கு ஈட்டி முனையாகப் பணியாற்றும் பெருமகன் — தமிழ்த்தாயின் திருமகன் — எமது காலத்தில் பிறந்த பேற்றினை உள்ளுகின்ற வேளையில் அகமகிழ்கிறோம், அன்னான் எம்மனோர்க்கு ஆற்றியுள்ள தொண்டினை எண்ணுகின்ற நேரத்தில் இறும்பூதெய்துகிறோம். இன்ன தகைத்தவன் தலைமையில் இயங்குகிறோம் என்று இறுமாப்படைகின்றோம் — இது ஒருபுறத்தில். மறுபுறத்தில் — காலம் கழிகிறதே. அண்ணனின் துடிப்பும் வேகமும் தளராமல், இளமை முறுக்கும் இலட்சியக் கிறுக்குமாக வலிவுடனும் பொலிவுடனும் அவர் இருக்கும்போதே இனத்தின் விடுதலை கைகூடவேண்டுமே என்ற அங்கலாய்ப்பு. அண்ணனுக்கு மூப்பு வருமுன்னே அவர் தலைமையில் தமிழினத்துக்கு அரசியற் காப்புறுதி செய்துகொள்ளவேண்டுமே என்ற ஒரு தவிப்பு.

**தனி அத்தியாயம்:**

ஈழத் தமிழ்த் தலைமையின் வரலாற்றிலே அமிர்தலிங்கம் திறந்த அத்தியாயம் தனித்துவமுடையது. இவ்வரலாற்றில் இருமுனைப் புரட்சிகளைச் சாதித்த சான்றாண்மை அவருடையது: (1) குலப் பெருமையும் குடும்பப் பெருமையும் கொண்டவர்கள் மட்டுமே பரம்பரையாக ஆண்டனுபவித்த ஐசுவரியம் தமிழ்த் தலைமை. அந்தத் தலைமையை பெற்றி மிகு பாரம்பரியப் பிறப்பினால் அல்ல, முற்றி முதிர்ந்த அசல் உழைப்பினால் எட்டியவர் இவர். விலாசந் தவறி விருதுபெற்றவர் அல்லர். விழுப்புண்பட்டு விருதுபெற்றவர். கட்சியமைப்பிலே அண்ணன் அவ்வப்போது பெற்ற பரிமாணங்களுக்கு ஒரு பரிணாம வளர்ச்சியுண்டு. (2) தலைமையென்பது குடைநிழலிருந்து குஞ்சர மூர்வதற்கு மட்டும உரியதல்ல, கண்ணீரையும் செந்நீரையும் காராக்கிரகத்தையும் இன்னோரன்ன இடிமைகளையும் உள்ளடக்கியது. என்ற தத்துவத்தைச் சித்தரித்து முன்மாதிரி காட்டினார் தந்தை செல்வா, அத்தத்துவத்தைச் செவ்வனே செயற்படுத்தியவர் அண்ணனே.

**திண்ணியன்:**

“பஞ்சமும் நோயும் உன் மெய்யடியார்க்கோ — பாரினில் மேன்மைகள் வேறினி யார்க்கோ” என சுதந்திர தேவியிடம் குறையிரந்தான் கவிஞன். இலட்சியப் போரிலே விளையும் சோதனைகளையும் வேதனைகளையும் முகம் சுழிக்காமல் தாங்கிக்கொண்ட திண்ணியன் அமிர்தலிங்கம். கொழுந்துவிட்டு எரியும் சுதந்திரச் சுவாலையிலே தன் மனைக் கொழுந்தாகிய இல்லாளையும், குலக் கொழுந்தாகிய பிள்ளையையும் மற்றும் புவனபோகங்களையும் பலியிடத் துணிந்துவிட்ட பேராளன். இதனால் இந்நாட்டின் இலட்சோப லட்சம் தமிழ் மக்களின் சிந்தையிலே நிறைந்துவிட்ட சீராளன்.

**விபத்து:**

சென்ற பொதுத் தேர்தலில் அண்ணனுக்கு அற்ப வாக்கு வித்தியாசத்தில் தற்செயலாக ஏற்பட்ட தோல்வி தமிழினத்துக்கு நேர்ந்த ஒரு பெரும் அரசியல் விபத்தாகும். அமிர்தலிங்கத்தின் அரசியல் வாழ்வு இத்துடன் அஸ்தமித்துவிட்டது என ஆரூடம் கணித்த அற்ப சந்தோஷக்காரரும் உளர். அத் தேர்தலின் பின் அமிர்தலிங்கத்தின் அரசியல் வாழ்வு கனகச்சிதமாகக் களைகட்டியிருக்கிறது என்பதும், அவர் சுக்கில பட்சத்துச் சோதியம்புலிபோல இன்று சுடர்விடுகிறார் என்பதும், இந்தக் கணிப்பாளருக்குச் சொல்லியா தெரியவேண்டும்?

**குப்பி விளக்கிலும்:**

இன்னொரு விடயத்தையும் இந்த மிலேச்ச வட்டாரங்கள் குறித்துக்கொள்ள வேண்டும். பராளுமன்ற உறுப்பினர் என்ற பதவிப்பீடம் கிடைத்தபோது மட்டும் பணியாற்றியவரல்ல அமிர்தலிங்கம். தோல்வியுற்றபோதிலும் மக்கள் மன்றத்தைவிட்டு ஓடி ஒளியாதவர். அலாவுதீனின் அற்புத விளக்கு வெளிச்சத்தில் மட்டும் அரசியல் பேசியவரல்ல, குப்பி விளக்கு வெளிச்சத்தின் ஊசலாட்டத்திலும் கூட தடுமாறாது கொள்கை முழக்கம் செய்கின்றவர். தேர்தல் களத்தின் ஏற்ற இறக்கங்கள் அன்னாரின் அரசியல் வாழ்வை வரையறுப்பனவல்ல.

**பல்லாண்டு வாழி!**

அமிர்தலிங்கம் — அடிமைவிலங்கிலே அழுந்திக்கொண்டிருக்கும் ஓர் இனத்தின் தலைமகன். விரக்தியின் விளிம்பிலே நின்று பேதலிக்கின்ற தமிழ் மக்கள் அண்ணன் அரை நூற்றாண்டுப் பராயத்தை எட்டுகின்ற செய்தியை தம் இதயத்திலே பவித்திரமாகப் பதித்துக்கொள்கின்றனர். தமிழ் மக்களின் தனித்துவமான வரலாற்றை படைக்க வேண்டிய இச் சரித்திர நாயகன் இன்னும் பல்லாண்டு வாழவேண்டுமென இறைவனை வேண்டுகின்றனர்.

— **கரிகாலன்**

● ‘காதலொருவனைக் கைப்பிடித்து அவன் காரியம் யாவினும் கைகொடுத்து’ வாழ்வதே புதுமைப்பெண்ணுக்கு பாரதி வகுத்த வரைவிலக்கணமாகும். பாரதி காட்டிய அதே புதுமைப்பெண்ணாக காட்சிதரும் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்கள், சிறந்த குடும்பத்தலைவியாகவும் அதே சமயம் தமிழ் மகளிர்பேரவையின் பொதுச்செயலாளராகவும்விளங்கி,நாட்டு விடுதலைப்போரிலும் முன்னணி வகிக்கும் வீராங்கனையாகத் திகழுகிறார். தமது கணவர் நாவலர் அமிர்தலிங்கம் அவர்களைப்பற்றி இதோ திருமதி அமிர்தலிங்கம் கூறுவதைப் படியுங்கள்!

# என் கணவர்

**திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம்**

**என்** கணவரை நான் வரித்துக்கொண்டநேரம் அவர் ஒரு நியாயவாதி, அரசியல் வாதி, ஆனால் பாராளுமன்ற உறுப்பினர் அல்ல. நான் சங்கீதப்பற்றுக்கொண்டவளாக இருந்தவள். அரசியல் அரிச்சுவடி தெரியாதவள். அந்த நேரம் அரசியலில் பெண்கள் தீவிரம் கொள்ளாத நேரம். பதிவுத்திருமணத்தின் பின்னர் 1954ம் ஆண்டு — கொத்தலாவலைக்குக் கறுப்புக்கொடி காட்டி குண்டாந்தடியால் தாக்கப்பட்டு இரத்தம் தோய ஒரு தமிழ் தாயின்தொண்டனாக என் கணவரைக் கண்டேன். 26வயது வாலிபனாக, வாலிப முன்னணியின் தலைவனாக, வாலிபர்களை ஓரணியில் திரட்டித் தலைவர்களின் உத்தரவைப்பெற்றுத் தனியாக வாலிபர்களே அந்தப்போராட்டத்தை துணிந்து நடாத்துவதற்குக் காரணமாக இருந்தவர் என் கணவர்.

அவரது மனதிற்குகந்தவளாக என்னைத்தேர்ந்து எடுத்து மணந்து கொண்டாலும், அவரது மனதில் ஏற்கெனவே குடியிருக்கும் பேறுபெற்றவள் கன்னித்தமிழ். எனவே அவளுக்குச்சேவை செய்யும் பேற்றையும் நான் மனமுவந்து ஏற்றுக்கொள்ள வைத்தார் என் கணவர். அவராக இந்தப் பணியை வலிந்து எனக்குத் திணிக்காமல் அவருடைய சொல்லாலும் செயலாலும் எனக்கு ஒரு ஆர்வத்தை ஊட்டி என்னை மனமார தமிழ்ப் பணியில் ஈடுபட வைத்தவர் என் கணவர்.

## தமிழ்ப்பற்று

மேடையில் பாடிக்கொண்டிருந்த எனக்கு அரசியல்மேடையில் பேசும் ஆர்வத்தை எழச்செய்து ஒரு பேச்சாளியாக்கியவர் என் கணவர். “தமிழின் பெருமையை இகழ்ந்தவனை என் தாய் தடுத்தாலும் விடேன்” என்ற முழக்கத்தை அவரது ஒவ்வொரு மேடைப் பேச்சிலும் கேட்பேன். அதைக் கேட்டு அவர் தன் தாய்மீது கொண்ட பற்றிலும் பார்க்கத் தமிழ் மீது கொண்டவற்றை உணர்ந்தேன். அதன் பலன் தானே என்னவோ தன் மகனையும், தாயை மறந்து சென்று நாடின்றி அலைய வைத்துத் தமிழால், தமிழ் பற்றால், என்னுடன் வாழவிடாமல் செய்தவர் என் கணவர்.



கட்டுரையாளரும் அவரது கணவரும்

## கடமையே கண்

இவ்வளவு தூரம் வீட்டிற்குள் ஒருவாழ்வு அரசியலில் ஒரு வாழ்வு என்றில்லாமல் வீட்டிலும் அரசியல் இன்றைய சூழ்நிலையில் வேண்டும் என வாழ்பவர் என் கணவர். அவர் அரசியலை ஒரு பொழுதுபோக்காக நினைத்திருந்தால் இன்று இவ்வளவு தூரம் நாம் பலியாக்கப் பட்டிருக்க மாட்டோம். தனது இளைய மகனை மூன்று தடவை 14 வயதில் பொலிஸ் அழைக்கக் காரணமாக இருந்தவர் என் கணவர். எனது மூத்த மகனைப் பெற்றெடுக்க

நூற்றுநாட்கள் மூளாய் வைத்தியசாலையில் இருந்துவேதனைப்பட சிங்களச்சட்டத்தை எதிர்த்து அந்த விவாதம் பெரிதென மதித்து நின்று பாராளுமன்றத்தில் முழங்கிவிட்டு, நான் அறிவிழந்த நிலையில் இருக்க, வாக்களிப்பையும் முடித்துக் கொண்டுவந்து சத்திரசிகிச்சை செய்து காண்டீபனைப் பெறக் கையொப்பமிட்டவர் என் கணவர். தமிழ்தாயின் விடுதலையே பெரிதென்றுகொண்டு தன் குடும்பத்தை, அருமையான புதல்வனையே அல்லல் படவைத்துள்ளார் என் கணவர்.

## கைசுத்தம்

சில உறுப்பினர்கள் பட்ட கடன்களைப் பல லட்சம் பொருள் தேடித் தீர்ப்பது போலல்லாமல், பாராளுமன்ற உறுப்பினர் என்ற நிலையில் தன் கடமையைச் செய்வதற்கு நன்றியாக ஒரு சிறு பொருளைத் தானும் யாராவதுகொண்டு வந்து கொடுத்து விட்டால் கொண்டுவந்தவர் மீது கடுமையாகக் கோபிப்பதுடன் அதை தன் கையால் தீண்டமறுக்கும் குணமுள்ளவர் என் கணவர். ஒரு சம்பவம் இன்றும் என் மனதில் பசுமையாக இருக்கிறது. அதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். என் கணவரை நேரில் சந்தித்துக்கொடுக்காமல் என்னிடம் மிகவும் கஷ்டப்பட்ட ஒரு பெண்மணி தன் மகளின் ஆசிரிய நியமனத்துக்காகப்பணம் கொண்டு வந்து என் கையில் வைத்தார். அது பணம் என்று அறிந்தவுடன் அந்தக் கணவரில்லாத விதவைத் தாயிடம் கொடுத்து நான் அவருடன் சேர்ந்து வாழ்வது உங்களுக்கு விருப்பமில்லையா' என்று சொல்லி அதைத் திருப்பிக்கொடுக்கும் வகையில் என் வாழ்வை அளித்தவர் என் கணவர். எவ்வளவோ பணம் சம்பாதித்து வாழக்கூடிய வாழ்வை யெல்லாம் உதறித்தள்ளி நேர்மையும் கண்ணியமும் தான் அரசியல் வாதியின் உடமை என வாழ்ந்து வருபவர் என் கணவர்.

## குறைகள்

என் கணவரிடம் சில குறைகளுண்டு. யாராவது ஏதாவது செய்யவேண்டும் என்றுகேட்டால் முடிந்தால் செய்கிறேன் என்பார், அல்லது இது என்னால் முடியாது என்று கூறிவிடுவார். இதனால் சிலர் கோபிப்பதுமுண்டு. 'ஏன் பார்க்கலாம்' என்று கூறியிருக்கலாமே என்று நான் கேட்டால் 'நான் அவர்களை ஏமாற்றி நாட்களை இழுத்து அவர்களையும் அலைக்க விரும்பவில்லை என்பார்.

## ஏமாற்றத்தெரியாதவர்

வாலிபர்களின் நெஞ்சங்களில் தன் செயல் மூலமும், நேர்மையான சோர்வில்லா அஞ்சாமை மூலமும் நிறைந்திருக்கும் என் கணவருக்கு, அவர்களை முதுகிலே கை போட்டு ஏமாற்றிக் கதைத்து விடைபெறத்தெரியாது. இதனால் ஒரு சிலர், இவரை நன்கு அறியாதவர்கள், இவருக்குத் திமிர் என்றும், தலைக்கனம் என்றும் கூறுவதுண்டு. ஏமாற்றி, வாய்வீச்சானபேச்சாலும், நரிச் சிரிப்பாலும் மக்களை நயமாகச்சொல்லி நடிக்கத்தெரியாதவர் என் கணவர். கோபம் வந்தால் நெற்றிக்கு நேரேயே தான் வாயைத் திறந்து ஏதாவது சொல்லிவிடுவார். நேரிலேயாருக்கும் எதையும் அஞ்சாது சொல்லுவது தான் இவர் குணமே தவிரப் போகவிட்டுப் புறம்சொல்லும் குணம் இவரிடம் அறவே கிடையாது.

பாராளுமன்ற உறுப்பினராக இருந்த நேரத்தில் என் கணவர் தனக்கு வாக்களித்தவரோ அல்லது மாறுபட்டவரோ, யாராக இருந்தாலும் ஒரே மாதிரி நடத்துவதை நான் பார்த்து ஆச்சரியமும் கோபமும் அடைவேன். ஆதரித்தவர்களுக்குச் செய்யக்கூடிய உதவியைச்செய்யும் அதே நேரத்தில் எதிர்த்து நின்றவர்கும் நான்தான் பிரதிநிதி என்று அவர் கூறுவார். யாரையும் பழிவாங்கவோ, வஞ்சம் தீர்க்கவோ இவர் முனைந்ததை என்னுடைய வாழ்க்கையில் நான் கண்டது கிடையாது.

## தோல்வியிலும் புன்சிரிப்பு

சென்ற தேர்தலில் தோற்ற போது மற்றவர்களெல்லாம் கதறியழ, புன் சிரிப்போடு வாக்குச் சீட்டு எண்ணுமிடத்திலிருந்து வெளியே சென்றார். வழியில் அவரைக்கண்ட மாவை சேனாதிராசா அவர் வென்றதாக எண்ணிக் கொண்டு சிறிதுதூரம் சென்றவர் வேறு யாரிடமோ செய்தி அறிந்து கதறி அழுதுகொண்டு ஓடி வந்த காட்சி என் கண் முன் அப்படியே நிற்கிறது. வாக்குச்சீட்டு எண்ணிமுடிந்தபின் எனக்குக்கூறினார் அழக்கூடாது அவமானம் தனக்குத் தான் என்று. நான் மனதைக் கட்டுப்படுத்தி வெளியில் வர உடுவில் தந்த நல்முத்து திரு. தர்மலிங்கம் அவர்கள் தலையிலே அடித்து அழுத நிலை என்னை மாற்றி அழ வைத்தது.

## எனது ஆசை

குடும்பத்தின் வாழ்வில் அக்கறையோடு நடக்கிறார் என்று இவரை நான் சொல்லமுடியாது. சாப்பாடு நேரத்துக்கு இல்லாமல் வருபவர்களோடு கதைத்துக்கொண்டிருந்து என்னையும் பட்டினியால் வாட்டிவிடுவார். சந்தோஷமாக ஓரிரு நாட்கள் எங்காவது போய் உல்லாசமாகப்பொழுது போக்கக் கூட விரும்பாத குணம் இவருடைய குணம். எமது குடும்பவாழ்வில் கூட்டமும், அரசியல் இயக்கமும்தான் இவருடைய பொழுதுபோக்கு படம் பார்க்கக்கூட இரண்டாம் காட்சிக்கு அழைத்துச் செல்லத்தான் இவருக்கு எப்பொழுதாவது நேரம்வரும்.

இத்தனைக்கும் மத்தியில் எங்கள் குடும்பவாழ்வு மகிழ்வோடும், இவரது அரசியல் பணிக்குக் குந்தகமில்லாமலும் விளங்கவேண்டுமென்றால் நானும் அவருடைய பணியில் பங்குகொள்ளவேண்டுமென்று எண்ணியே பங்கு கொள்கிறேன். மக்களின் நம்பிக்கை வீண்போகாது என் கணவர் உழைக்க நான் அவர் கூடப் பக்கத் துணையாய் நின்று பணி செய்யவே விரும்புகிறேன். என் கணவருடன் பணி புரிந்து வருகின்ற சுகதுக்கங்களைக் குடும்பவாழ்வில் மட்டுமல்ல, அரசியல் வாழ்விலும் பகிர்ந்து கொள்வதையே நான் அவர் மனைவி என்ற ஸ்தானத்தில் நின்று விரும்புகிறேன். அந்த வாழ்வுக்கேற்ற மனபலத்தை ஆண்டவன் எனக்குத்தருவான் என நம்புகிறேன்.

# செவ்வாய் கிரகத்தில் உயிர்வாழ்க்கை உண்டா?

**✻ இன்னும் சில தினங்களில் செவ்வாய்க்கிரகத்தில் உயிரினம் வாழ்ந்தனவா-வாழ்கின்றனவா என்ற கேள்விக்கு விடை காணப்பட்டுவிடக்கூடும்! ஏதோ ஒருவகை உயிரினம் வாழலாம் என்று விஞ்ஞானிகள் நம்புகிருர்கள்...!**

நில உலகைத் தவிரப்பிற கோள்களில் உயிரினம் ஏதாவது உண்டா? இதைக் கண்டுபிடிக்க மனிதன் செய்யும் முயற்சி தான் 'வைக்கிங்' திட்டம். செவ்வாய்க் கோளை நோக்கிச் சென்ற இரண்டு 'வைக்கிங்' கலங்களில் ஒன்று ஜுலை 21-அன்று காலை 5-30 மணிக்கு அங்கே இறங்கிவிட்டது. வைக்கிங் - 2 செப்டம்பர் 4-ஆம் நாள் இறங்கக்கூடும்.

விண்வெளி வீரர்கள் சந்திரனில் இறங்கப் பயன் படுத்திய 'அப்பலோ' விண்கலங்களையோ, பூமியைச் சுற்றி வரும் 'ஸ்கைலாப்' விண்வெளி நிலையத்தையோவிட மிகவும் சிக்கலானவை யு. எஸ். 'வைக்கிங் கலங்கள்.

வைக்கிங்கலம் இரண்டு பகுதிகளை உடையது. ஒன்று 'ஆர்ப்பிட்டர்', மற்றது 'லாண்டர்'; ஆர்ப்பிட்டர் செவ்வாய்க் கோளைச் சுற்றி வந்து கொண்டிருக்க, 'லாண்டர்' செவ்வாயில் இறங்கியது. ஒவ்வொரு ஆர்ப்பிட்டரிலும் 16 முக்கியமான துணை' அமைப்புக்களும் ஒவ்வொரு லாண்டரிலும் 13 துணை அமைப்புகளும் உள்ளன. துவக்கப்பணி ஐந்து மாதம்வரை நீடித்தாலும் லாண்டரும் ஆர்ப்பிட்டரும் பல ஆண்டுகளுக்கு பணியாற்றிவரும்.

செவ்வாயின் மேற்பரப்பில் எடுக்கும் லட்சக் கணக்கான தனித்தனி அளவைகள் லாண்டரில் பதிவாகி சேகரமாகின்றன. இவை பின்பு ஆர்ப்பிட்டருக்கு அஞ்சல் செய்யப்பட்டு அங்கிருந்து பூமிக்குத் தெரிவிக்கப்படும். பூமியில் கம்ப்யூட்டர் பொறிகள் இத்தகவல்களை பாகுபாடு ›சய்தபின் ஆவலுடனுள்ள 70 விஞ்ஞானிகளுக்குக் கிடைத்து வருகின்றன. 'வைக்கிங்' குழுவினர் நாள் ஒன்றுக்கு 24 மணிநேரம் 'ஷிஃப்ட்' முறை வைத்துப் பணியாற்றுகிருர்கள்.

நிலத்தின் ஆழத்தில் உள்ளவற்றைக் கண்டறியும் விதம் உயிரியல், பௌதிகஇயல், ரசாயனஇயல் இவற்றின்படி நடத்தும் இந்த ஆய்வு, விண்வெளி விஞ்ஞானத்திலேயே மிகவும் பரபரப்பூட்டுவது. இந்தத் திட்டத்தைத் தீட்டியதே மிகக் கடினமான பணியாக இருந்தது.

வைக்கிங் 1 செவ்வாயை இரண்டு வாரம் 'ஊர் சுற்றிப் பார்க்க' இறங்குவதற்கு ஏற்கனவே தெரிந்தெடுத்த இடங்கள் தகுதியானவைதாமா, பத்திரமானவைதாமா என்பதைச் சோதித்து இறங்கியும் விட்டது. 'ஆர்ப்பிட்டர்' செவ்வாயை 24.6 மணி நேரத்துக்கு ஒரு தடவை சுற்றிவந்து கொண்டிருந்தது. ஒரு செவ்வாய் நாள் என்பது 24.6 மணி நேரமாகும்.

சந்திரனிலே இறங்கும் இடத்தில் கற்பாறைகளும், மலைப் பிளவுகளும் இருப்பதைக் கண்டவுடன் சந்திரனில் இறங்கும் பணியைத் தாமே மேற்கொண்டு, பத்திரமாக இறங்கினுர்கள். ஆனுல் 'வைக்கிங்' அப்படியல்ல. அதனுடன் உடனடியான தகவல தொடர்பு கிடையாது. ரேடியோ அலைகள் செவ்வாயிலிருந்து புறப்பட்டுப் பூமியை அடைய 20 நிமிடம் பிடிக்கிறது. எனவே, 'லாண்டர்' செவ்வாயின் மேற்பரப்பை நோக்கி இறங்கும் போது ஏதாவது கோளாறு ஏற்படுமானுல், பூமியில் இருக்கும் 'வைக்கிங்' பயண அதிகாரிகளால் ஒன்றும் செய்யமுடியாது.

கம்ப்யூட்டர் உள்ளிட்டு எல்லா வைக்கிங் கருவிகளும் பல நாட்கள் 112 டிகிரி ஸெண்டிகிரேடு வெப்பத்துக்கு மேல் தாக்குப் பிடிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. செவ்வாய் இரவு குளிர் மிக்கது; பூஜ்யத்துக்குக் 120 டிகிரி ஸெண்டிகிரேடு (—120 டிகிரி). இந்தக் குளிரையும் தாக்குபிடிக்கும் வகையில் கருவிகள் உள்ளன.

ஒரு தடவை: மேலே செவ்வாயைச் சுற்றிக்கொண்டிருக்கும் 'ஆர்ப்பிட்டர்' 'லாண்டர்' இறங்கும் இடத்துக்கு மேலாக ஒரு தடவைதான் செல்லும். அதோடு செவ்வாய்க்கும் பூமிக்குமிடையே 20 நிமிட தாமதம் இருக்கிறது, எனவே, திட்ட மாறுதல்கள் அமுல் செய்ய இரண்டு நாள் பிடிக்கும்.

லாண்டரில் இருக்கும் உயிரியல் ஆய்வுகூடம். ஏதாவது உயிரினம் இருக்கிறதா என்று பார்க்கச் செவ்வாய் மண்ணை ஆராய்கிறது. "கியாஸ் குரோமாட்டோகிராஃப் மாஸ் ஸ்பெ

* * * * * * * * * * * * * *

**எவர்லி டிரிஸ்கால்**

* * * * ** * * * * * * *

க்ரோமீட்டர்" (ஜி. ஸி. எம். எஸ்.) என்ற கருவி செவ்வாய்க் கோளின் மேற்பரப்புக்கு அருகில் உள்ள வளிமண்டலத்தை ஆராயும். மண்ணில் கதிரியக்க சேர்க்கைப் பொருள் ஏதாவது உள்ளதா என்று ஆராயும். உயிரியல் ஆய்வு கூடத்தின் ஓர் அறை முழுவதும் கருவிகளாகவே இருக்கும். யாவும் தாமே இயங்கும் கருவிகள். மிக நுண்ணியவை. 40,000 மின் கருவிகளும், 23.000 டிரான்ஸிஸ்டர்களும், 42 சின்னஞ் சிறு வால்வுகளும்' 38 கம்பி இணைப்பு வெப்பமூட்டும் கருவிகளும் உள்ளன. இவை தவிரக் கதிரியக்க ஐஸடோப் விசை சப்ளைக்கருவி, வெயில்விசை உண்டு பண்ணும் 'ஸிமுலேட்டர்' கருவிகள், கதிரியக்கம் கண்டு பிடிக்

கும் கருவிகள், அடுப்புகள், மண் ஆராயும் கருவிகள் கியாஸ் அளவிடும் கருவி, நுண் உயிரினங்கள் ஏதாவது இருந்தால் அவற்றுக்கு உணவு, மின்விசைத்தகவல்போக்கு வரத்துச் சூழ்நிலை கருவிகள், நீர்விசை காற்று அழுத்த அமைப்புகள் முதலியவையும் உண்டு. இவை அனைத்தையும் ஒரு கனஅடிக்குள் அடக்கியிருககிறார்கள்.

(லாண்டர் வெற்றிகரமாகச் செவ்வாயில் இறங்கி ஒருவாரம் கழித்து, 10 அடி நீளமுள்ள ஒரு 'கை' லாண்டரிலிருந்து வெளியே வந்தது. லாண்டரில் இருக்கும் கமிராக்களின் கண்கள் கண்காணித்துக் கொண்டிருக்கும்போது மண் வெட்டி போல் இருக்கும் கையின் தலை ஒரு கையளவு மண் தோண்டி யெடுத்தது. தலை 30 ராத்தல் ஆற்றலில் தோண்டக்கூடியது. ஐந்து ராத்தல் ஆற்றலில் தூககக்கூடியது. தோண்டி எடுத்த மண் கலங்களில் போடபபடுகிறது.

விரல் குமிழ் போன்று இருக்கும். முதல் மண் அறை ஒன்றில், ஒளிச் சேர்க்கை உரிய அடையாளங்கள் ஏதேனும் உண்டா என்பதை ஆராய்கிறார்கள் விஞ்ஞானிகள். ஒளிச் சேர்க்கை என்றால் என்ன? உயிரினங்கள், வாயுமண்டலத்தில் இருக்கும் கரியமிலவாயுவை வெயிலின் உதவியுடன் கரிய மிலச் சேர்க்கைப் பொருளாக (ஆற்றல்) மாற்றி, ஆக்ஸிஜனைக் கழிவுப் பொருளாக வெளியே விடுகின்றன.

சூரிய விளக்கு ஒன்று, செவ்வாய் போன்ற சூழ்நிலையில் வெயிலை செயறகையாகத் தோற்றுவிக்கிறது. உயிருளள எதுவும் அறையின் வெளியிலுள்ளகரியமிலத்தை,தன்திசுக்களுக்குள் சேர்த்துக கொள்ளும். கரியமிலம், கதிரியக்க டிரேஸர்ன் (கார்பன்-14) பூச்சுப் பெற்றது.

ஐந்து நாட்களுக்குப் பிறகு அறையின் வளி அகற்றப்படுகிறது - பயன்படாமல் எஞ்சியிருக்கும் கார்பன் 14-ஐ எடுப்பதற்காகத்தான். பின்னர் மண்ணுக்கு எரியூட்டப்படுகிறது—கரியமில ஆவி ஏதேனும் இருந்தால் வெளியேற்றுவதற்கு. கார்பன்-14 இருக்கிறதா என்பதைக் காண ஆவிகளை ஆராய்கிறார்கள். இருக்குமானால், ஒளிச் சேர்க்கை வழியாக உயிர் பெற்ற உயிரினம் மண்ணில் இருந்திருக்கவேண்டும் என்று தெரியும்.

இரண்டாவது அறையில் மண்ணுக்கு 'உணவு' ஊட்டுகிறார்கள். இதிலும் கார்பன்-14 உண்டு. இந்தச் சோதனையில் வளர்சிதை மாற்றத்து அறிகுறிகள் இருக்கின்றனவா என பதை அறிய ஆய்வு நடத்துகிறார்கள். வளர்சிதை மாற றத்தின் வழியாகத்தான் உயிரினங்கள் உணவை, ஆற்றலுக்கும் இனப் பெருக்கததுக்கும் கழிவுகளை வெளியேற்றுவதற்கும் பயன்படுத்துகின்றன.

மண்ணில் கருவுயிர் 11ல் இருக்கும். மண்ணிலே வளர் சிதை மாற்றத்துக்கு உணவைப் பயன்படுத்தும் நுண்ணுயிர்கள், நாம் கொடுக்கும் ஊட்ட உணவை உட்கொண்டு (தெரிந்தெடுத்துள்ள உணவு அவற்றுக்குப் பிடிக்குமானால்) வாயுக்களைக் கழிவாக வெளியேற்றும். கார்பன்டை ஆக்ஸைடு, கார்பன்மோனாக்ஸைடு; மெத்தேன் போன்ற வாயுக்கள் இவை; இவற்றிலே கார்பன்-14ஐக் கண்டுபிடித்துவிடலாம்.

மூன்றாவது சோதனையின் லட்சியம் 'கியாஸ்' பரிமாற்றம.

உயிரினங்கள் உயிர் வாழ்க்கையில் மூச்சுவிடுகின்றன; உணவு உட்கொள்கின்றன; இனவிருத்தி செய்கின்றன. இதனால் அவற்றின் சுற்றுச் சூழ்நிலை மாறுகிறது. கியாஸ் குரோமாடோகிராஃப், அறையில் ஒவ்வொரு நாளும் இந்த வாயுக்களைஆராய்கிறது;ஹைட்ரஜன், நைட்ரஜன், ஆக்ஸிஜன் மெத்தேன், கார்பன் டை ஆக்ஸைடு ஆகியவற்றின் அறிகுறிகள் எவையேனும் இருக்கின்றனவா என்பதைக் காணமுயல்கிறது. உயிர் வாழும் செயல்கள் உள்ளன என்பதற்கு இந்த வாயுக்கள் அடையாளம்.

மின் அணு அமைப்பு: உயிரியல் ஆய்வுக்கூடத்தில் இருக்கும் மின் அணு அமைப்பு, பூமியில் ஆய்வுக்குவேண்டிய தகவல்கள் அனைத்தையும் சேகரிக்கிறது. தெளிவான முடிவுகள் இருந்தால், உறுதி செகவதற்காக, மண் மாதிரிகள் மீண்டும் கட்டுப்பாடுடன் கூடிய சோதனைக்கு உட்படுத்தப்படும்.

செவ்வாயில் உயிரினம் இருக்கிறதா இல்லையா என்பதைக் கண்டுபிடிப்பது மிக முக்கியம் என்றாலும், அதன் நிலத்தினுள் இருப்பவற்றை ஆராய்வதில் அக்கறைகொண்டிருக்கிறார்கள் விஞ்ஞானிகள். செவ்வாயும் பூமியைப்போல் தோன்றியதா, ரசாயன முறைப்படி அது எவ்வளவு வெப்பமுள்ளதாக இருக்கிறது என்ற கேள்விகளுக்கு விடைகாண விஞ்ஞானிகள் 'எக்ஸ்ரே-ஃப்ளோரன்ஸ்' சோதனை முறையைக் கைக்கொண்டு செவ்வாய் மண்ணில் மூலப் பொருள்கள், கனிப் பொருள்கள் இருக்கின்றனவா என்று பார்ப்பார்கள்.

லாண்டரிலும், எளிய கருவிகள் உள்ளன. அழுத்தம், வெப்பம். காற்றின் வேகம முதலிய வற்றைச் செவ்வாய் மேற்பரப்பில் அளவிட வானிலை அளவிடும் கருவிகளும் செவ்வாய் நடுக்கங்களை அளவிட நடுக்க அளவைக் கருவிகளும் லாண்டரில் உள்ளன. செவ்வாய் நடுக்கம், வெசவாய்க்குள்ளே குமுறல் எப்படி இருக்கிறது முதலியனபற்றி விஞ்ஞானிகள் அறிவதற்கு அவை வகை செய்யும். 'வைக்கிங்'கில் காந்தங்களும் உண்டு.இவை,மண்மாதிரிகளைத் தோண்டி எடுக்கும் 'கை'யில் உள்ளன; செவ்வாய் மண்ணில் காந்தப் பொருள்கள் உள்ளனவா என்பதைத் தெரிந்து கொள்ளவும், செவ்வாயின் தோற்றம் பற்றிய பிற ரகசியங்களை அறியவும் இந்தக் காந்தங்கள் உதவி செய்கின்றன.

(நன்றி:- அமெரிக்க தகவல் நிலையம்)

# மலர் ஆசிரியர் அன்புமணி

ஈழத்தில் கலைச்செல்விக்குப் பின் மிகவும் மதிப்பான மாதச்சஞ்சிகையை நடாத்தி இன்று ஓய்ந்திருக்கும் மலர் ஆசிரியர் அன்புமணியை அவரது இல்லத்தில் சந்திக்கச் சென்றபோது அவர் இலக்கிய தாகமும் நல் விருந்தும் என்னை ஒரு இரவு அவருடன் தங்க வைத்தது. புத்தகங்கள். சஞ்சிகைகள், பத்திரிகைகள் பைல் செய்தும், பைன்ட் செய்தும் மிகவும் அழகாக வைத்திருக்கும் அன்புமணி காத்தான்குடியிலுள்ள ஆரையம்பதியில் 6-3-35ம் ஆண்டு பிறந்தார். 1952ல் ஓர் எழுதுவினைஞராகச் சேர்ந்த அன்புமணி இன்று மட்டக்களப்புக் கல்வித்திணைக்களத்தில் நிர்வாக உதவியாளராகக் கடமையாற்றி வருகின்றார். இவரின் இயற்பெயர் இரா. நாகலிங்கம்.

இதுவரை 30 சிறுகதைகளையும் 12 வானொலி நாடகங்களையும் எழுதிய அன்புமணி, தான் எழுதிய 'திரைகடல்தீபம்' நாடகத்திற்கு கலைக்கழகப்பரிசை 1962ல் பெற்றார். கலைக்கதிர், கல்கி, கங்கை, புதுமை, கண்ணன், மர்மக்கதை முதலிய தமிழக சஞ்சிகைகளில் அதிக கதை, கட்டுரைகளை எழுதிய ஈழத்து எழுத்தாளர்களில் அன்புமணியும் ஒருவர். அவரது கன்னிப் படைப்பான 'கிராமப்போன் காதல்' 1955ல் கல்கியில் வெளிவந்தது. அதன்பின் தமிழக சஞ்சிகைகளுக்கும். ஈழத்து சஞ்சிகை நாளிதழ்களுக்கும் அப்போது அடிக்கடி எழுதிப் புகழ்பெற்றார். 'தீபச்சுடர்' குறுநாவல் ஈழநாட்டில் வெளிவந்தது. 1967ல் நமது பாதை என்ற தொடர் நாடகம் இலங்கை வானொலியில் ஒலிபரப்பானபோது அதனைப் பாராட்டாதார் இல்லை என்னுமளவுக்கு அவர் நாடகம் தனிச்சுவையுடனும், நயத்துடனும் மிளிர்ந்தது.



இன்று மட்டக்களப்பு தமிழ் எழுத்தாளர் சங்கச் செயலாளராக இருக்கும் அன்புமணி, மட்டக்களப்பு கலாசார சபையின் நியமன உறுப்பினராகவும், விளங்குகின்றார். கேலிச்சித்திரம் வரைவதிலும், சித்திரத் தொடர் கதை எழுதுவதிலும்' மேடை நாடகங்கள் எழுதித் தயாரித்து நடித்து வருவதிலும் ஈடுபாடுடையவராக விளங்குமவரை சுடர் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டிய அவசியம் இருக்காது. அவர் கருத்துக்களை வாசகர்களுக்காக மகிழ்ச்சியுடன் வெளியிடுகின்றோம்.

## கண்டோம் கருத்தறிந்தோம்!

கே. சிறந்த மாத இதழான மலர் பத்திரிகையை நடாத்தத்தூண்டிய சந்தர்ப்பத்தைத்தெரிவிக்கின்றீர்களா?

ப. சஞ்சிகைகள், பத்திரிகைகள், நாவல்கள் வாசிப்பதில் எனக்கு அதிக ஆர்வமுண்டு. அவற்றைப்படித்தபோது நானும் ஒரு மாசிகையை வெளியிட்டாலென்ன என்று ஆலோசித்தேன். என்னுடன் வேலை செய்யும் சில நண்பர்களுக்கு இக்கருத்தைச் சொன்னேன். எனது நண்பர்கள் ஐவரும் நானுமாகச் சேர்ந்து தலைக்கு ரூபா 500 சேர்த்து மூவாயிரம் ரூபா முதலுடன் 1970ல் மலர் சஞ்சிகையைத் தொடங்கினேன். ஆரம்பத்தில் 1000 இதழ்களை வெளியிட்ட நான் துணிந்து 2000 இதழ்களை வெளியிட்டேன். மலர் சஞ்சிகை வெற்றிபெற எனக்கு உதவிய ஐந்து நண்பர்களையும் மிக்க நன்றியுடன் நினைத்துப் பார்க்கிறேன். அவர்கள் முதலீடு செய்த பணத்தை திரும்பவும் என்னிடமிருந்து எதிர் பார்க்காது இலக்கிய சேவைக்காக பணம் மனமுவந்தளித்த பெருமக்கள் அவர்கள்.

கே: மலர் மிகத் தரமான சஞ்சிகையாக இருந்தும் இடையில் நிறுத்த வேண்டியேற்பட்டதேன்?

ப: காரணங்கள் பல. அவற்றுள் முக்கியமானவை, வியாபாரிகள் விற்பனைப்பணத்தை ஒழுங்காக அனுப்பாமை. விளம்பரங்கள் சேகரிப்பதிலுள்ள கஷ்டம். தயாரிப்புச் செலவுகள் அதிகரித்தமை முக்கியமாக இருந்த தடைக்கற்கள்.

# கையெழுத்து கேட்காதே!

அந்தக் குக்கிராமத்தில் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது. தமிழரசுத் தந்தை செல்வநாயகம் பேசவந்திருக்கிறார். மேடையில் செல்வா அமைதியாகவும், தெளிவாகவும் உரையாற்றிக் கொண்டிருந்தார். உன்னிப்பாக அதை கவனித்துக் கொண்டிருந்தது கூட்டம்!

திடீரென்று கூட்டத்தில் சிறு சலசலப்பு. ஒரு சிறுவன் கூட்டத்திடையே புகுந்து ஓடி வந்து கொண்டிருந்தான். வந்தவன் நேராக தந்தையிடம் சென்று தன்னுடைய ஆட்டோகிராப் புத்தகத்தை நீட்டினான். நீங்கள் பேசியதும் கூட்டம் உங்களை சூழ்ந்துவிடும். அதனாலேதான் இப்போதே கையெழுத்து வாங்க ஓடி வந்தேன். எனக்கு ஏதாவது எழுதி கையெழுத்தையும் போட்டுக் கொடுங்கள்; நான் ஓடிப் போயிடுறேன்' என்றான் இளைக்க இளைக்க.

அவன் ஏழ்மைக் கோலத்தையும், அதே வேளையில் அவனது ஆர்வத்தையும் கண்ட தந்தை செல்வா ஏதோ இரண்டு வரியை எழுதி கையெழுத்தையும் போட்டுக் கொடுத்தார். அவர் எழுதியிருந்ததைப் பார்த்த சிறுவனின் கண்கள் கலங்கிவிட்டன. அவர் எழுதியிருந்தது இதுதான்: ''என்னிடம் கையெழுத்து கேட்காதே; உன்னிடம் நான் கையெழுத்து கேட்கும் படியாக உயர்ந்துவாழ்''.

— தகவல்: கட்டுவன் சிவஞானம்

---

கே: 'மலர்' இதழை நடாத்திய அநுபவத்தைக் கொண்டு ஈழத்தில் வெளிவரும் சிறுகதைகளின் தரத்தை மதிப்பிடுங்கள் பார்க்கலாம்?

ப: தரமான சிறுகதைகள் எழுதக்கூடிய ஈழத்து எழுத்தாளர் மிகச்சிலரே. வளரும் எழுத்தாளர்கள் பலர் சரியானமுறையில் வழி நடாத்தப்படாமையால் அறுவடை பதராக உள்ளது. இதற்கு முக்கிய காரணம், என் அனுமானப்படி ஆழ்ந்து அகன்ற இலக்கியப் பிரக்ஞை இன்மை, தனது எழுத்தை அச்சில் பார்க்கும் அவசரம், தங்களுக்கே புரியாத இலக்கியக் கோட்பாடுகள், வாய்ப்பாடுகள் முதலியவற்றுக்கமைய 'கதை பண்ணுதல்' முதலியன. சுருங்கக்கூறின் தமிழகத்தின் சிறந்த படைப்புகளையும், ஈழத்தின் சிறந்த படைப்புக்களையும் எடைபோட்டுப் பார்த்தால், ஈழத்துச் சிறுகதையின் தரம் தாழ்ந்திருப்பதை அவதானிக்கலாம். உண்மையை மறந்து, அல்லது மறைத்து வீணாக மார்தட்டுவதில் அர்த்தமில்லை.

கே: எத்தகைய எழுத்தாளர்களை நீங்கள் முற்போக்கெழுத்தாளர் எனக் கணிக்கிறீர்கள்.?

ப: கட்சிக் கோட்பாடுகள், குழுக் கட்டுப்பாடுகள், அணிப்பிரக்ஞை முதலிய தளைகளுக்குள் அகப்படாமல் பிரச்சாரவாடை எதுவுமன்றி புதுமையான கருத்துக்களைக் கலையழகுடனும், இலக்கியநயத்துடனும் இயல்பான படைப்பாகத் தருபவர்களையே நான் முற்போக்கு எழுத்தாளர்களாகக் கருதுகின்றேன். அத்தகையோர் மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணம் வீசும் என்ற கொள்கையையுடையவராக இருப்பர் அவர்தம் படைப்புக்கள் சிந்தனையிற் செம்மையை ஏற்படுத்த வல்லன-

கே: யதார்த்த இலக்கியம்பற்றித் தங்கள் கருத்தென்ன?

ப: இலக்கியம் யதார்த்த ரீதியாக அமைய வேண்டும் என்பதில் இரண்டு கருத்துக்கள் இருக்கமுடியாது. ஆனால் எது யதார்த்த இலக்கியம் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு காட்சியைப் போட்டோ பிடிப்பதற்கும், அதே காட்சியை வர்ணஓவியமாகத் தீட்டுவதற்கும் உள்ள வித்தியாசம் யதார்த்தத்திற்கும், யதார்த்த இலக்கியத்திற்குமுண்டு. கொச்சை மொழி உரையாடல், டெக்னிக்கல் வர்ணனை, முதலியன இல்லாமலே மண்வாசனை வீசும் யதார்த்த இலக்கியங்களைப் படைக்க முடியும் என்பதை அமரர் கல்கி போன்றோரின் சிறுகதைகளைப் படிப்பவர்கள் அறிந்து கொள்ளலாம்.

கே: மலர் ஆசிரியரான தாங்கள் சமீப காலங்களில் வெளிவந்த, வெளிவந்து கொண்டிருக்கும் சஞ்சிகைகளை மதிப்பிடுகிறீர்களா?

ப: பல சஞ்சிகைகள் கவர்ச்சியான அமைப்பு இல்லாமலேயே வெளிவருகின்றன. பல சஞ்சிகைகள் 'கனம்' இல்லாமலே வெளிவருகின்றன. உண்மையைச் சொல்வதானால் சமீபகால சஞ்சிகைகளில் 'சுடர்' திருப்தியாக அமைந்துள்ளது என்றே கூறவேண்டும். இது முகஸ்துதி அல்ல.

செவ்வி கண்டவர்: புத்தொளி

# சாத்தான் வேதம் ஓதுகின்றது

சமூக நவீனம்

**மேல் நோக்கிச் சறுக்குவது என்பது கிடையாது. கீழ் நோக்கிச் சறுக்க ஆரம்பித்துவிட்டால் இடையில் நிற்பது என்பதும் கிடையாது.**

**—ஜார்ஜ் எலியட்.**

[2]

ஒவ்வொருவனுடைய வாழ்க்கையும் அவன் கொண்டிருக்கும் ஆசையிலும், நம்பிக்கையிலுமே ஒட்டிக்கொண்டிருக்கின்றது. அவன் செய்கின்ற குற்றங்களுக்கும், தவறுகளுக்கும் அதுவே மூலகாரணமாகின்றது. இதன் மூலமே அவன் அனுபவங்களையடைகின்றான். உண்மை எது? பொய் எது? நன்மை எது? தீமை எது? என்று பகிர்ந்துணர்கின்றான். இறைவன் எழுதி வைத்த விதிக்கேற்ப ஆசைகளின் உந்தல்களில் மனிதன் தனது வாழ்க்கைப் பயணத்தைத் தொடருகின்றான். மதுமலர் அன்று அப்போது வந்து நின்றிருக்காது போனுல் சில வேளை அவனுடைய பயணம் வேறு திசையில் மாறியிருக்கலாம். கட்டிலில் கிடந்த மனேகர் மீண்டும் சிகரட் புகையை உறிஞ்சி இழுத்தான். சிகரட் புகையின் வாசனையில் மதுமலரின் உருவம் நினைவுத் திரையில் நிழலாடியது.

பொங்கித் ததும்பும் போதைப் பொருள் போல அவள் நின்ற கோலத்தை வெறித்துப் பார்த்தான் மனேகர். அவனுடைய உணர்வுகளில் ஏற்கெனவே போதை கலந்துவிட்டிருந்தது. அவளது பார்வையில் கனிந்துகொண்டிருக்கும்உணர்ச்சிகளைப்பார்த்த மதுமலர் நிலைமையை உணர்ந்துகொண்டாள். அந்தக் கோலத்தில் அவளை அவன் பல தடவை பார்த்திருக்கின்றான். ஆனுல் இப்படி ஒரு நிலை அப்போதெல்லாம் அவனுக்கு ஏற்பட்டது இல்லை. மனதுக்குள் எவ்வளவோ நினைத்து மகிழ்ந்து பின்பு அந்த நினைவுகளை அழித்து நிராசையாக்கிவிட்டிருக்கின்றான். ஆனுல் இன்று அவன் உள்ளத்து ஆசைகளுக்கு, குடிபோதை வலிமையைக் கொடுத்துவிட்டதுஎன்று சொல்வதைவிட விதி தனது வலையை விரித்துவிட்டது என்றே சொல்லவேண்டும்.

"என்ன மனே வீட்டிற்குப் புறப்பட்டுட்டீங்களா?"

"ம் ஹுகும்"

"நான் குளிக்கலாம் என்று புறப்பட்டேன். அதுதான் உங்களிடம் சொல்லிவிட்டுக் கிணற்றடிக்குப் போகலாம் என்று..." அவள் முடிப்பதற்குள் அவன் அவளுக்குச் சமீபமாக வந்துவிட்டான்.

அவள் எதுவும் பேசவில்லை. அசையாத சிலையென, பனிப் பதுமைபோல நின்றிருந்தாள். அவன் அவள் கரங்களைப் பற்றியவாறே "மஞ்சு எங்கே?" என்று கேட்டான்.

"அவள் நித்திரை."

"மது நான் ஒன்று சொன்னுல் இல்லை... இல்லை... கேட்டால் நீ கோபிக்க மாட்டியே?" அவன் குரல் ஒழுங்கின்றி ஓசை மாறி, தடுமாறி ஒலித்தது.

"நீங்கள் எனக்கு எவ்வளவோ உதவி செய்திருக்கின்றீர்கள்.

நீங்கள் எது கேட்டாலும் நான் கோபிக்கப்போவதில்லை. சொல்லுங்கள்."

மெழுகுப் பொம்மையின் தோள்களைப் போன்று வழுவழு என்றிருந்த அவளுடைய மிருதுவான தோளில் கையை வைத்துத் தடவியவாறே "இது எவ்வளவு அழகாயிருக்கின்றது."

"இதுமட்டும் தானு?"

"இல்லை நீயும் தான் மது... உன்னை... நான்... மது...மது..." அவன் கரங்கள் அவளை வளைத்துப் பிடித்து நெஞ்சோடு நெஞ்சாய் இறுக்கிக்கொண்டன.

இழந்துபோன ஒரு பொருளைத் திரும்பப் பெறும்போது எமது மனநிலை எப்படியிருக்கும். அப்படிப்பட்ட ஒரு நிலையில் தன்னையிழந்து, தன் நிலை மறந்து நின்றாள் மதுமலர்.

நிமிடங்கள் நகர்ந்தன. விதி தான் விரித்த வலையில் அவர்களை வீழ்த்திக்கொண்டே இருந்தது.

அன்று நடந்த நிகழ்ச்சிகளின் நினைவில் மூழ்கிக் கிடந்த மனேகர் கைவிரலில் சிகரட்டின்

**கே.எஸ். ஆனந்தன்**



பிடிபட்ட திருடன்:- என்னங்க நீங்க என்னை தூரத்திவந்த வேகத்திலே உங்கள் தொப்பியை தவறவிட்டுவிட்டீர்களே! நான் போய் எடுத்து வருகிறேன்; நீங்கள் இங்கேயே இருக்கிறீர்களா?

பொலீஸ்:- என்னடா, என்னை ஏமாற்றி விட்டுப் போய் விடலாம் என்று பார்க்கிறாயா? நீ இங்கேயே இரு! நான் போய்எடுத்துகொண்டு வருகிறேன்! —யோகன்

* * * * * * * * * * *

நெருப்புச் சுட்டதும் திடுக்கிட்டு சுய உணர்வடைந்தான்.

மதுவருந்தப் பழகிய மனோகர் மதுமலரின் பழக்கத்தையும் சேர்த்துக்கொண்டான். அன்றுடன் அதுபோதும் என்று விட்டிருக்கலாம். வாலிபப் பருவத்தில் ஆரம்பிக்கும் கனவு வாழ்க்கை கன்னியர்க்கு கடிதங்கள் எழுதுவதிலும், கற்பனை இன்பத்தில் பகற்கனவு காண்பதிலும் கழிந்த ஆசைகள்—அவனை அண்மித்து அனுபவங்களாகும்போது ஒரு தடவையில் ஆசை நிறைவேறிவிடுகின்றதா? மனிதனுடைய ஆசை எந்தக் கட்டத்திலுமே பூர்த்தியடைவதில்லையே. ஓரளவு கிடைத்தால் போதும் என்று நினைக்கும் மனம் அது கிடைத்ததும் அடுத்த கட்டத்திற்குத் தாவுகின்றது. அது மீண்டும், மீண்டும் வளர்ந்து கொண்டே முடிவைத் தேடி ஓடுகின்றது. அப்படித்தான் மனோகரின் நிலையும்.

மதுமலரின் பழக்கம் அவள் வீட்டிற்கே அவனைத் தினமும் இழுத்துச்சென்றது. அவளுக்குத் தேவையானது எது என்று அவள் கேளாமலே அவன் கொண்டு சென்றான். முறைப்படி தாலிகட்டி செய்யப்படாத ஒரு இல்லறம் அவனைப் பொறுத்தளவில் உறுதியாகிவிட்டிருந்தது.

ஊரைப் பற்றியும், உலகத்தைப் பற்றியும் அவனோ—அவளோ கவலைப்பட்டதில்லை. பெற்றதாயின் அன்புக்கு ஆளாகிய அவன் அவள் மீது வெறுப்புக்கொண்டான்.

கீழ்வானம் வெளுத்து செங்கதிரோன் தன் நாளாந்தக் கடமைக்குப் புறப்பட ஆயத்தமாகிக்கொண்டிருந்தான். அறைக் கதவில் தட்டியபடியே "தம்பி, தம்பி" என்று குரல் கொடுத்தாள் பார்வதியம்மாள். "ம்" என்றான்.

அவள் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்தாள். நெற்றியில் பளிச்சிடும் திருநீற்றையும், கவலைதோய்ந்த முகத்தையும், பார்த்ததும் எதுவும் பேசாமலே தேனீரை வைத்துவிட்டு அவள் வெளியே சென்றதையும் சேர்த்துப் பார்த்தபோது இரவு என்ன நடந்திருக்கும் என்று மீண்டும் அசை போட்டான். ஞாபகத்திற்கு வரவில்லை.

எழுந்து தேனீர் பருகிவிட்டு பற்பொடி எடுப்பதற்குக் கலண்டரைக் கிழித்தபோது தான் முதல் நாள் சதுர்த்தி விரதம் என்ற ஞாபகம் வந்தது. தான் சாப்பிடாவிட்டால் தாய் சாப்பிட்டிருக்கமாட்டாளே என்ற ஞாபகம் வந்ததும் சில நிமிட நேரம் அவன் மனதை ஏதோ உறுத்தியது. ஒரு சில நிமிடங்கள் தான்! அடுத்த நிமிடம் அவன் அது பற்றிக் கவலைப்பட்டவனாகத் தெரியவில்லை.

காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வேலைக்குப் புறப்படுவதற்கு ஆயத்தமாக வந்த போது "ஏன் தம்பி இப்பவும் பசியில்லையா? நான் ஒருத்தி உயிருடன் இருக்கின்றேன் என்ற நினைப்பாவது இருக்கா?" என்றவாறு சாப்பாட்டுமேசையில் காலை ஆகாரங்களைக் கொண்டு சென்று வைத்தாள். எதுவும் பேசாமல் சாப்பிட்டு விட்டு எழுந்து சென்றுவிட்டான்.

காலையில் பொதுவாகப் போதையில்லாதபோது அவன் ஒரு தங்கக் கம்பி. யார் எது பேசினாலும் எதிர்த்துப் பேச மாட்டான். நாணல்போல வளைந்துகொடுப்பான். அவனுக்குள்ளே போதை போய் விட்டால் பின்பு அவன்தான் பேசுவான். அவனைத் திருத்தவும் முடியாது. என்ற நிலைக்குப் பார்வதியம்மாள் வந்து விட்டாள். கடவுள் விட்ட வழி என்று பேசாமலிருந்தாலும் பெற்றமனம் பித்தாச்சே!

ஒரு நாள் அவன் இரவுநேரங் கழித்து வீட்டிற்குத் திரும்பியிருந்தான், ஊரில் அவனைப் பற்றிப் பலர் பலவிதமாய்க் கதைத்தனர், மதுமலரும் அவனும் சேர்ந்து குடும்பமாய் வாழ்வது பற்றியும் பார்வதியின் காதுக்கு எட்டியிருந்தது. எப்படியும் இன்றைக்கு ஒரு முற்றுக்கட்டிவிடுகின்றேன் என்று பார்வதி அம்மாள் உறுதிபூண்டிருந்தாள். அன்றுதான் அவனும் நேரங்கழித்து வீடு வந்திருந்தான். சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போதே "ஏன் தம்பி அவள் வீட்டை நீ போறது பற்றி ஊரும் உலகமும் எப்படியெல்லாம் கதைக்குது என்று உனக்குத் தெரியுமே?"

* * * * * * * * * * *

## ஒரு காதல் கதை!

"கண்ணே! என்னைக் கல்யாணம் செய்துகொள்ள மறுத்தால் செத்துப்போவேன்!" என்றான் காதலன்.

காதலி மறுத்தாள். காதலன் ஐம்பது வருடங்களுக்குப் பிறகு செத்துப் போனான். —யோகன்.

* * * * * * * * * * *

"...ஓ... அதுவா? கதைக்கட்டுமே. நீ ஊரில் கதைகளைக் கேட்கிறதில்லையா? அது மாதிரித்தான்'' என்றான்.

"அது சரி தம்பி. நீ தேவையில்லாமல் அங்கை ஏன் போய் வாறே?''

"கட்டாயம் தெரிய வேணுமா?''

"ஆமா தெரிந்தால் கேட்கிறவைக்கு நானும் சொல்லலாம் இல்லையா?''

"எனக்கு நீ என்ன சேர்த்து வைத்திருக்கின்றாய்? நான் உழைத்ததையும் அவளவையிடம் சுருட்டிக் கொடுத்துவிட்டு வெறுங்கையோடு விட்டுவிட்டாய். என் பொறுப்பிலுள்ள கிளை ஸ்தாபனத்தில் ஏற்பட்ட நட்டத்தைச் சரி செய்து கணக்குக் காட்ட வேண்டும் என்று நீ பெற்ற செல்வங்களிட்டை இரண்டாயிரம் ரூபாய்க்கு ஒரு கிழமையாய் அலைஞ்சன், தந்தால் திருப்பித் தருவானோ என்று சந்தேகத்தில் கையை விரித்து விட்டாளவை. உன்னைக் கேட்டு என்ன பிரயோசனம்? எங்கெல்லாமோ ஓடினேன். கடைசியில் அவள் எங்களுக்கும் உறவுக்காரிதானே. நான் கேளாமலே பணம் கொடுத்தாள். அப்படிப்பட்டவளிடம் நான் போவேன்—வருவேன். இல்லை அவளைத்தான் கல்யாணம் செய்தாலும் செய்வேன். அதுபற்றி யார் என்னைக் கேட்கமுடியும்?'' என்று இரைந்தான்.

பார்வதியம்மாள் பெட்டிப் பாம்பாய் அடங்கிவிட்டாள். பேசமுடியாமல் அவள் வாயைப் பூட்டிவிட்டான்.

"தம்பி நான் அதுக்குச் சொல்லவில்லை.''

"எதுக்குச் சொல்லவில்லை? எனக்கெல்லாம் தெரியும். உனக்கு யார் சொன்னால் என்ன? அவள் வீட்டை நான் போவேன். அதைத் தடை செய்ய யாராலும் முடியாது.'' என்று கூறிவிட்டான்.

அதே சமயம் மதுமலரின் வீட்டிலும் பெரும் அமளி



துமளி ஏற்பட்டது. மதுமலரின் கூடப் பிறந்தவர்களும், தாயுமாய்ச் சேர்ந்து அவளுக்குப் பல சட்டங்கள் போட்டனர். அவளும் கடைசியில் அவர்களைப் பகைத்துக் கொண்டு தனி வீடு கட்டிக் கொண்டாள். அதன் பின்பு அவளுடைய பாடு பயன் யாவும் மனேகரே பார்த்து வந்தான். ஆரம்பத்திலிருந்த எதிர்ப்புக்கள் யாவும் பிசுபிசுத்துவிட்டன. நாளடைவில் அவர்களைப்பற்றிக் கதைத்தவர்கள் எல்லோரும் பின் வாங்கிவிட்டனர்.

நல்ல குலத்தில்—நல்ல குடும்பத்தில் பிறந்தவள் தான் மதுமலர் இளமையும், அழகும் அவளைத் தம் மனைவியாக்குவதற்கு எத்தனையோ வாலிப உள்ளங்களில் கனவுகளைத் தோற்றுவித்துவந்தன. ஆனால் பெற்றோரின் விருப்பப்படி அவள் சிவசாமியைத் திருமணம் செய்துகொண்டாள். அரசாங்க உத்தியோகத்தனை சிவசாமிக்கும், அவளுக்கும் ஏனோ வாழ்க்கைப் பயணம் ஒத்துப் போகவில்லை. நாகரீக மோகமும், குடியும் அவனைப் பெண் பித்துப்பிடித்தலையச் செய்தது. கல்யாணமாகி ஒருவருடத்திலேயே மஞ்சுளாவைப் பெற்றுவிட்டாள் மதுமலர். அவளுக்கு ஒரு வயது நிரம்புவதற்குள் இரத்தவாந்தி எடுத்து தன் வாழ்க்கையை முடித்துக்கொண்டான் சிவ



தமிழ் இலக்கண ஆசிரியை:- ஏய் லீலா! "நான் அழகாக இருக்கிறேன்" என்பதை எதிர்காலத்தில் சொல்லுடி!

மாணவி: எதிர்காலத்தில் நீங்கள் கிழவியாக இருப்பீங்க டீச்சர். —யோகன்.

* * * * * * * * * *

சாமி. அவனுடைய மரணம் பற்றிப் பலர் பலவிதமாகப் பேசினர். மதுமலர் அதுபற்றிக் கவலைப்படவில்லை. அவள் வாழ்வோடு விதி விளையாடி விட்டது.

மனோகர் தூரத்து உறவினன். அவள் வீட்டிற்கு வந்து போவது உண்டு. அந்தப் பழக்கம் அவர்களிடையில் ஒரு வித பிணைப்பை ஏற்படுத்தி விட்டது. கணவனை இழந்தவளானாலும் அவள் கட்டுக்குலையா உடலோடு, இளமைப் பொலிவுடன் பார்த்தவர் மயங்கும் போதைப் பொருளாகவேயிருந்தாள். இந்நிலையில் அவளை மறுமணம் செய்யச் சொல்லி வீட்டார் வற்புறுத்தினர். அவள் சம்மதிக்கவில்லை. அந்த வேளையில்தான் மனோகர் அவளை...!

அவள் மனோகரிடம் பல தடவை தன்னைத் திருமணம் செய்துகொள்ளும்படி கேட்டிருக்கின்றாள். அதற்கு அவன் கூறும் காரணங்கள் அவளைப் பெட்டிப் பாம்பாக அடக்கி விடும். அவளும் தன் அறிவுக்கு எட்டியவரை சிந்தித்து அவன் கூறுவதை ஆமோதித்துக்கொள்வாள்.

அன்று மாலையில் மனோகர் வந்ததும் முதல் நாளைய நிகழ்ச்சி பற்றி விசாரித்தாள். அளவு மீறிக் குடிக்கக் கூடாது என்று அறிவுரை கூறினாள். பெற்ற தாயை அவன் மதிப்பதில்லை என்பதையறிந்து அது பற்றிக் கேட்டாள்.

"ஏன் மனோ நேற்று நீங்கள் வீட்டில் சாப்பிடவில்லையென்றால் அம்மாவும் பட்டினி தானே?"

"தெரியாது,"

"இருந்தாலும் அவர்கள் சொல்லுக்கு ஓரளவு மதிப்புக் கொடுக்கவேண்டும்."

"சரி உன்னைக் கைவிடச் சொல்கிறா அம்மா. அப்படிச் செய்யவா?"

"மனோ!"

"என்ன?"

"நீங்கள் என்மீது அன்பு வைத்திருந்தால் இப்படிக் கேட்பீர்களா?"

"உன் மீது அன்பு வைக்கவில்லை. காதல்கொண்டிருக்கின்றேன், போதுமா?" என்று கேட்டுவிட்டுச் சிரித்தான்.

"ஒரு பெண்ணின்மீது காதல் கொள்ளும்போது உடல் இச்சை உந்தித் தள்ளுமானால், அந்தக் காதல் ஆத்மாவின் ராகமல்ல. சரீரத்தின் தாளமே.' என்று ஓர் அறிஞன் கூறிய வாக்கியத்தை மதுமலரும் படித்திருந்தாள். ஆனாலும் காதல் என்றதும் அவர்கள் அகராதியில் முதல் நிற்பது சரீரத்தின் தாளம் தானே!

ஊடலில் ஆரம்பமாகிக் கூடலில் முடியும் அவர்களது நாளாந்த வாழ்க்கையின் நியமனங்கள். அவற்றையெல்லாம் முடித்துக்கொண்டு தன் வீடு வந்து சேர்ந்தான்.

வழமைபோல வரவேற்றதாய் அவன் வந்ததும் வராததுமாய், "கடிதம் ஒன்று வந்திருக்குத் தம்பி. கையெழுத்துப் போட்டுத்தான் எடுத்தேன்" என்று ஒரு பதிவுக் கடிதத்தைக் கொண்டுவந்து கொடுத்தாள். அவசர அவசரமாய்க் கடிதத்தைப் பிரித்துப் படித்தவன் மனதில் அதுவரையிலிருந்த மகிழ்ச்சியெல்லாம் கரைந்து அதிர்ச்சி தலைதூக்கியது. அவன் எதிர்காலத்தையே கலக்கக்கூடிய செய்தியை அந்தக் கடிதம் கொண்டிருந்தது. அவனுடைய ஆசைகள், நம்பிக்கைகள் அத்தனையையும் பாதாளத்துள் தூக்கி எறியும் அறிவிப்பாக அந்தக் கடிதம் அவனைப் பார்த்துச் சிரிப்பதுபோன்றிருந்தது. —(வளரும்)

* * * * * * * * * *



பைத்தியம் (1):- பைத்தியங்களைச் சுகமாக்குற ஆஸ்பத்திரின்னு சொல்லுறாங்களே. அங்கே நீ போயிருக்கியா?

பைத்தியம்(2):- சீ, நாம எல்லாம் அங்கே போகக்கூடாது அப்புறம் நமக்கும் பைத்தியம் பிடிச்சிடும். —க. கலா.

# ஏழாலை எப்படி வந்தது?

வெ. சு. நடராசா

கடந்த ஆனி, ஆடிச் "சுடர்" இதழ்களில் ஏழாலை என்னும் பெயர் எப்படி வந்ததென்று ஒரு சர்ச்சை அடிபடுகிறது. விஷயமறிந்தோர் இதை விளக்கவேண்டும்.

ஏழாலை ஒன்றிய இள நங்கையரின் ஊர்ப் பற்றுக்குத் தலைசாய்க்கும் அதேவேளையில் அவர்களது அறியாமையையும், ஆதாரமின்றி நிரூபிக்க முற்படுவதையும் உலகறியச் செய்ய வேண்டும்.

சிலர் ஒரு ஊரில் வசிப்பதால் அவர்கள் தங்களுக்கே எல்லாம் தெரியுமென்று அறுதியிட்டுப் பெருமை பேசிக்கொள்ளலாகாது. "கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு". அப்படிப் பேசிக்கொள்ள முற்படுவோர் தங்கள் பண்பை வெளிப்படையாகக் காட்டிக்கொள்கின்றார்கள். இவர்கள் முதலில் "இள நங்கையர்" என்ற போர்வையில் மறைந்து நில்லாது தங்களின் உண்மைப் பெயர்களில் நின்று உண்மைகளை விளம்ப வேண்டும் புனைபெயர்களில் மறைந்து நின்று சொல்பவர்கள் கூறுவதை எப்படி உண்மையென்று ஏற்றுக்கொள்ளமுடியும்?

இக்காலத்தில் பாக்கிஸ்தான் நாட்டின் ஒரு பகுதியாக விளங்கும் இந்து நதிப் பள்ளத்தாக்குப் பகுதியை ஆராய்ந்த வெளிநாட்டறிஞர் சேர். யோண் மார்ஷல் (Sir John Marshall) அவர்கள் அந்த இடம் பல்லாயிரம் வருடங்களுக்கு நாகரீகம் மிக்க திராவிட இன மக்கள் அதுவும் இந்துக்கள் வாழ்ந்த பகுதியென்று அறுதியிட்டுக் கூறியிருக்கின்றார். "மொகஞ்சதாரோ," "ஹாரப்பா" என்னுமிடங்களை ஆராய்ந்த இவ்வறிஞர் சேர் யோன் மார்ஷல் அவர்கள் இந்துநதிப் பள்ளத்தாக்கு வாசியுமல்லர். இந்த இந்துநதிப் பள்ளத்தாக்கில் இப்போது இஸ்லாம் மதத்தினரான முஸ்லிம் மக்கள் வசிக்கின்றார்கள். இந்த முஸ்லிம் மக்கள் "நாங்கள் இந்த ஊரில் வசிக்கின்றோம் இந்த இடத்தின் நாகரீக வளர்ச்சி எங்களுக்கே தெரியும், இந்த "மொகஞ்சதாரோ" 'ஹாரப்பா" ஆகிய பகுதிகள் முற்காலத்தில் முஸ்லிம்கள் குடியேறி ஆதிகாலம்தொட்டு வாழ்ந்த இடம் தான்" என்று கூறி மறுக்கவில்லை.

யாழ்ப்பாணத்துப் பெரியார்கள் பலர் யாழ்ப்பாண ஊர்களின் பெயர்களை ஆராய்ந்து அந்தந்த ஊர்களின் வரலாற்றை வெளியிட்டவர்கள் அனேகமாக அந்த ஊர் வாசிகளல்லர். ஒரு ஊர்ப்பெயரை அந்த ஊர் மக்களே நூல் ஆதாரமின்றி ஆராயப் புகுந்தால் ஊர்ப்பற்று மிகுதியினால் அண்டப் புழுகு ஆகாசப் புழுகு ஆகியனவற்றையெல்லாம் அவிழ்த்து விடுவார்கள். இதனாலே தான் மகாகவி பாரதியாரும்

"திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்" என்று கூறிப் போந்தார். ஏழாலையைப் பற்றி ஆராய்ந்த உள் ஊரவர் யார்? வெளியூரவர் யார்? "யாழ்ப்பாணவைபவ விமர்சனம்" எழுதிய சுவாமிகள் ஞானப்பிரகாச அடிகளும் ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரல்லவே. அவர் கூறுகின்றார் "ஆலை" என்பது குளங்களிலிருந்து நீர் கொண்டு செல்லும் புராதன வாய்க்கால்களையே குறிக்கும் என்று. அதற்கு உதாரணமாக அல்லது எடுத்துக்காட்டாக பன்னாலை, துன்னாலை, இளவாலை, சில்லாலை, அரியாலை, ஏழாலை, சரசாலை, மீசாலையெனப் பல இடங்களைக் குறிக்கின்றார். இதை ஒருவகையில் ஏற்றுக் கொள்ளமுடிகிறது.

ஏழு ஆலயங்கள் உள்ளதால்தான் இப்பெயர் வநததென்பதை எவரும் ஒத்துக் கொள்ள மாட்டார். ஏன் எனில் ஏழு ஆலயம் அல்ல எழுபது ஆலயங்கள் உள்ள ஊர்களுமுண்டு. அந்த இடங்களின் பெயர்களெல்லாம் "ஆலை"யென்று முடியவில்லையே.

இக்காலத்தில்யாழ்ப்பாணத்தில் சில ஊர்களில் இடப் பெயர்களைத் தவறாக மாற்றிக் கொள்வதில் பெருமையடைகிறார்கள். என்றாலும் தங்கள் நோக்கத்தை விளப்பமின்றி நிறைவேற்றிக் கொள்ளுகின்றார்கள். எடுத்துக்காட்டாக முற்காலத்தில் 'கள்ளியங்காடு" என்றிருந்த கிராமத்தை இப்போது "கல்வியங்காடு" என்று அழைக்கிறார்கள். முற்காலத்தில் கள்ளிச் செடிகள் நிறைந்த காடாக இருந்தமையினால் "கள்ளியங்காடு" என்ற பெயர் வந்திருக்கலாம். ஆனால் இப்போது கல்விக்கும் காட்டுக்கும் என்ன தொடப்பு?

கொக்குவிலில் ஒரு வீதியை இப்போது "பொற்பதி" றோட் என்று அழைக்கின்றார்கள் அந்தத் தெரு இற்றைக்கு 40 அல்லது 50 வருடங்களுக்குமுன் புற்பற்றை நிறைந்த தெருவாகக் காட்சியளித்ததை நாமறிவோம். அதை மாற்றி இப்போது "பொற்பதி" என்று வழங்குவதில் பெருமைகொள்ளுகிறார்கள்.

இதேமாதிரித்தான் ஏழாலை மக்களும் தமது ஊர்ப் பெயருக்கு ஒரு புதிய வியாக்கியானம் கொடுத்து அழைக்க விரும்புகிறார்கள் போலும்.

● ஏழாலை ஆராய்ச்சி இத்துடன் முடிவடைகிறது.

— ஆர்

# உறுதி

ஊரின் ஒதுக்குப் புறத்தினிலே—தாழை
உட்கார்ந்திருக்கும் கடற்கரையில்

மாரி மணல்மிசை வீற்றிருந்தாள்!—முத்தன்
மாமயிலாள் மடி மீதிருந்தான்!

நீரின் அலைகள் எழுந்து விழும்!—காதல்
நெஞ்சம் இரண்டங்கே கொந்தளிக்கும்!

ஓரிடம் வாழிடம் அற்றவர்கள்—சாவின்
ஓரத்திலே உயிர் வைத்திருந்தார்!

விண்ணைத் தொடும் மாடி வீட்டுக்காரி—இன்ப
வெள்ளி நிலாப் பெண் இனியாள் மாரி!
'கண்ணை மயக்குமோர் ஏழை மகன்—முத்தன்
கைகளில் உள்ளம் கொடுத்திருந்தாள்!
மண்ணை மறந்தவர் வாழ்க்கையிலே—அப்பன்
மாடிப் பணத்தன் இடைப் புகுந்தான்!
பெண்ணைப் பிறனுக்கு விற்கவந்தான்!—மாரி
பெற்றவனை மோதி நிற்க வந்தாள்!

ஏடி! நீ என்ன பிறப்படியோ?—முத்தன்
என்னடி என்ன உருப்படியோ?
மாடி உடையோம்! நம் மாண்பென்னடி?-அந்த
மடையனுக்கான உன் நோன்பென்னடி?
'ஏடி?' என்றான் அப்பன்! ஏந்திழையாள் -'முத்தன்
இன்னுயிர் நாடி!' என்றாள்! இரைந்தாள்!
'போடி! போய்த்தொலையடி!' என்றானப்பன்!
—மாரி
பொங்கிச் சினந்தாள்! புறம் நடந்தாள்!

முத்தன் இருந்தான் குடிசையிலே!—மாரி
முன்வந்து நின்றாள்! முகம் கவிழ்த்தாள்!
கொத்து விழிமலர் நீர் பறித்தாள்!—முத்தன்
கோதை நிலைமை தெரிந்துகொண்டான்!
இத்தரைப் பணத்தரை ஈனத்தரை—மண்ணில்
எதிர்த்தவராய் நெஞ்சம் கொதித்தவராய்
கத்தும் அலைகடல் ஓரத்திலே—வந்து
காதலர் கண்ணீர்க் கடல் குளித்தார்!


வையகம் என்னும் இப்பொய்யகத்தில்-நஞ்சர்
வாழ் நிலத்தில் இந்தப் பாழ்நிலத்தில்
கையில் பணமிலார் வாழ்வதுண்டோ?—ஏழை
காதலிலே இன்பம் சூழ்வதுண்டோ?

தையலாள் மாரி தனை இழந்தாள்!—'அத்தான்
சாவோம்!' என்றாள்! 'காலம் ஆவோம்!'
என்றாள்;

மைவிழிக்காரி கரம்பிடித்தே—முத்தன்
மங்கைமுனம் தமிழ் பொங்குகின்றான்...

கிள்ளை எழில் வஞ்சி கேளடி கேள்!—வானம்
கிழிந்திடினும் புவி அழிந்திடினும்
உள்ளம் நடுங்கா திருப்பவரே—காதல்
ஒன்றை நினைந்திடல் ஒண்ணுமடி!
சுள்ளி மனத்தருக் கென்ன காதல்?—வாழும்
துணிச்சல் இலாதவர்க்கென்ன காதல்?
சுள்ளம் அறியா உயிர் இரண்டை—ஏடி!
கடலில் நொறுக்கவோ காதலித்தோப்?'

'வானத் தொளிர் வண்ணப் பொன்னிலவே!
—மாரி
வட்டக் கருங்கண் எழில் வடிவே!
ஈனப் பணத்தர் விழி எதிரில்—நாங்கள்
இருப்போம்! இருப்போம்! இருப்போமடி!
மானத்தராய் இங்கு வாழ்ந்திருப்போம்!-இந்த
மண்ணை அழித்தொரு மண்படைப்போம்
மோனச் சிலையே! நிமிர்ந்திரடி'!—என்றான்
முத்தன்! முகம் பூத்தாள் முல்லைக்கொடி!



பொன்மணல் ஆழி எழில்நிலத்தில்—நாரை
புணர்ச்சி மகிழும் கடற்கரையில்
இன்னுயிர் வாழ்வை விரும்பியவர்—அங்கே
இருவர் மகிழ்வுகள் ஏற்றிருந்தார்!
மின்னல் இடைப்பெண் அழகு மகள்—மாரி
மேனி சிவந்ததைப் பாடுவதோ?
கன்னியாள் பட்டதும் பாடுகளே!—முத்தன்
கைவிரல் பட்டதும் பாடுகளே!

—காசி ஆனந்தன்.

# தத்துவச் சிந்தனைகள்

## என்னைத் தேடுகிறேன்!

**'நான்'** யார்?

உயிர் அல்லது ஆத்மா என்கிறார்களே — அது என்ன?

இந்தக் கேள்விகளுக்கு விடை தேடித் திரிகிறேன்.

'என்'னை ஒவ்வொருவரும் ஒவ்வொரு முறை சொல்லிக் கூப்பிடுகிறார்கள்.

'என்' மனைவிக்கு நான் கணவன்!

'என்' தந்தை என்னை 'மகனே என்கிறார்!

'என்' தம்பிகள் என்னை 'அண்ணன்' என்கிறார்கள்!

'என்' சகோதரிகள் என்னை 'தம்பி' என்கிறார்கள்!

'என்'னை ஒவ்வொருவரும் இப்படியே ஒவ்வொரு முறை வைத்துக் கொண்டு கூப்பிடுகிறார்கள்!

மொத்தமாக 'என்'னை அடையாளம் காட்டுவதற்காக 'கோவை மகேசன்' என்னும் பெயரை 'நான்' சுமந்து கொண்டிருக்கிறேன்!

இந்த 'நான்' என்பது யார்?

'நான் யார்? என் உள்ளமார்? ஞானங்களார்? என்னை யாரறிவார்?' என்பது நால்வரில் ஒருவர் எழுப்பிய கேள்வி!

எனக்குப் பசிக்கும் போது 'நான்' சாப்பிடுகிறேன்!

எனக்குப் பசிக்கிறது என்பதை எனக்கு உணர்த்துவது யார்?

உடலா அல்லது அதன் உள்ளேயிருப்பதாகச் சொல்லப்படும் ஆத்மாவா?

பசி எதற்கு ஏற்படுகிறது — உடலுக்கா அல்லது ஆத்மாவுக்கா?

பசியெடுப்பது வெறும் உடலுக்கு மட்டும் தான் என்றால் உயிர் போன பின்னர் பிணத்துக்குப் பசியெடுப்பதில்லையே!

உடம்பார் அழியின், உயிரார் அழிவர் என்பது திருமந்திரம்!

உடம்பும், உயிரும் சேர்ந்திருக்கும் நிலைக்குத்தான் பெயர் கோவை மகேசன்!

நான் இறந்துவிட்டால் இன்னார் இறந்து விட்டார் என்பார்கள்!

உயிர் பிரிந்த பின்னர் கிடக்கும் உடம்பைப் பார்த்து 'சவம்' என்பார்களே தவிர, எவ்வளவு பெரிய நிலையிலிருந்தவர் இறந்து போனாலும் அவரது சடலத்தைப் பெயர் சொல்லி யாரும் அழைக்க மாட்டார்கள்!

நான் நினைத்தால் உலகத்தையே ஆட்டி வைப்பேன்......

நான் நினைத்தால் இதைச் செய்து முடித்திருப்பேன்......

இப்படியெல்லாம் நான், நான் என்று மனிதன் பேசுகிறான்!

இப்படிப் பேசியவர்கள் எல்லாம், தாமாக நடமாடமுடியாமல் நான்குபேர் தூக்கிச் செல்ல வேண்டிய நிலையில் முடிவில் பிணமாகிக் கிடந்ததைக் கண்டபோது சிரித்திருக்கிறேன்!

'நான்' என்றால் என்ன? — 'நான்' என்றால் யார்? — என்ற கேள்விகளுக்கு விடை காணாமலேயே — 'நான், நான்' என்று ஆணவம் பேசுகிறான் நாளை பிணமாகப் போகிற மனிதன்!

'நானும் பொய், என் அன்பும் பொய், என் நெஞ்சும் பொய்' என்பது மணிவாசகம்!

'உன்னையே நீ உணர்வாய்' என்பது ஞானி சோக்கிரடீசின் தத்துவம்!

இறைவனைத்தேடி அங்கும் இங்கும் அலையாதே — நீ உன்னை உணர்ந்தால், உனக்குள்ளே இறைவனைக் காணலாம் என்பது மகரிஷி ரமணரின் தத்துவம்!

'தத்துவமசி' — நீ அது (இறைவன்) ஆகிறாய் என்பது உபநிஷத வாக்கு!

நான் என்னைத் தேடுகிறேன்!

என்னை எனக்குள்ளே தேடி நான் யார் என்பதைக் காணும் போது — அங்கு இறைவனையும் காண்பேன்!

**கோவை மகேசன்**

# புத்தக விமர்சனம்

நூல்: 'சொந்தங்கள் தொடர் கின்றன'
(சிறுகதைத் தொகுப்பு)

**ஆசிரியர்: காவலூர் எஸ். ஜெகநாதன்**

**விலை: ரூபா இரண்டு**

**வெளியிட்டவர்கள்: இளம் எழுத்தாளர் ஒன்றியம்**
**245, கொஸ்வத்த வீதி,**
**கலபளுவாவ,**
**இராஜகிரிய**

**கா**வலூர் எஸ். ஜெகநாதனின் "சொந்தங்கள் தொடர் கின்றன" ஏழு கதைகளைக் கொண்ட சிறுகதைத் தொகுப்பு — முற்போக்கு, மறுமலர்ச்சி என்ற போர்வையிலே யதார்த்த இலக்கியங்கள் என்று கூறிக்கொண்டு நான்கு சுவர்களுக்குள்ளே நடக்கின்ற கட்டிலறைக் கதைகளை பச்சை பச்சையாக, படிப்பவர் உள்ளத்திலே கிளர்ச்சியையும் சிலருக்கு — அருவருப்பையும் ஊட்டக் கூடிய ஆபாச இலக்கிய மரபில் நின்று காவலூர் ஜெகநாதனின் இப் படைப்பு மாறுபட்டு நிற்கின்றது.

சீதனக் கொடுமைக்கு ஒரு சீண்டலாக **"ஒரு ஓடம் கரை சேருகிறது."**

"ஈன்று புறந் தருதல் என்றலைக் 'கடனே சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே" என்ற பொன்முடியாரின் பாடலுக்கு ஒரு சவாலாக **"தாய் ஒரு கோயில்"**

சாதிப் பிரச்சினைக்கு ஒரு சாடல் **'வரம்புகள் அழிகின்றன"**

"இரக்கம் எங்குளதோ அதுவே இறைவன் வாழும் கோவில் என்பதை விளக்க **"கருணை உள்ளம்"**

"உயிர்வாழ வேண்டும் என்பதற்காக உடலை விற்கிறாள் ஏழை. உலகம் எள்ளி நகையாடுகிறது. உவகை அடைய, உறவு வேண்டும் என்பதற்காக உடல் விருந்து அளிக்கிறாள் உள்ள இடத்துப் பெண். உலகத்தின் கண்களில் முன்னவள் விபசாரி, பின்னவள் உத்தமி. இக் கருத்தை தாங்கி **"உறவுகள் உடலுக்கல்ல"**

இருப்பவன் இரங்க மறுக்கிறான், உழைப்பவன் ஒடிந்து மடிகின்றான், ஊரவன் வாழ தன் சக்தியை உழைப்பென்னும் வாய்க்கால் மூலம் பாய்ச்சுபவன், உணர்வு பெற்று, வாய்க்காலை திசை திருப்பிவிட்டால் வளைந்துள்ள அவன் வாழ்க்கைப் பயிர் நிமிர்ந்துதான் ஆகும் என்பதற்கு **"பயிர்கள் நிமிர்ந்து விட்டன."**

உண்மை அன்புக்கு எல்லையில்லை — குறிப்பிட்ட காலமில்லை. குப்பையிற் கிடந்தாலும் தங்கம் தன் தன்மையை இழந்துவிடுவதில்லை — அவனுக்காக வந்தாள் — அவனுக்காக நின்றாள் — அவனுக்காக அழிந்தாள் — அவனைக்கண்டே இறந்தாள். உண்மை அன்பு உருவாக்கிய சொந்தம் உலகோடு, உடலோடு முடியாது, உயிரோடு தொடரும் என்பதைக் காட்ட **"சொந்தங்கள் தொடர்கின்றன."**

ஏழு கதைகளிலும் சொல்லவந்த கருத்தைச் சொல்லிவிடுகிறார். சில இடங்களில் குறிப்பாக "எனக்கு இரத்தத்தை ஊட்டத் தானடா தெரியும் உறிஞ்சத் தெரியாதடா" போன்ற உள்ளத்தைத் தொடும் கருத்துச் செறிவுள்ள வசனங்களைச் சேர்த்துள்ளார். ஆனால் அவர் உள்ளக் கருத்தைக் கதையிலே பிரதிபலிக்கச் செய்யும் முயற்சியில் வாழ்க்கையில் முரண்பாடான யுக்திகளைச் சேர்க்காது விட்டிருந்தால் இன்னும் சிறப்பாக அமைந்திருக்கும். வாழ்க்கைக்கு வேண்டியன, வாழ்க்கையோடு இணைந்த, இயல்பாக நடக்கக் கூடிய சம்பவங்களுடன் கதைகளைக் கட்டியெழுப்பியிருக்கலாம். கதையின் கருப்பொருள் தேவையானதும், நல்லதுமாக இருந்தாலும், குறிப்பாக "கருணை உள்ளம்" போன்ற கதைகளை காலத்துக்கு ஒவ்வக் கூடிய விதத்தில் அமைத்திருக்கலாம்.

இன்னுமொன்றை குறிப்பிட்டே ஆக வேண்டும். "ஆள்பாதி ஆடைபாதி" என்பது மனித உடலுக்கு மட்டுமல்ல ஒரு நூலுக்கும் பொருந்தும். கருத்துச் செறிவான கதைகளை உள்ளடக்கியிருந்தும், அட்டை விடயத்தில் ஆசிரியர் காட்டியுள்ள அசிரத்தையை உணர முடிகின்றது.

எனினும் இளம் எழுத்தாளர், வளரும் எழுத்தாளர் என்ற இடத்தில் வைத்து நோக்கும் பொழுது, இன்றைய ஏனைய முற்போக்குக் குப்பைகளைவிட காவலூர் ஜெகநாதன் அவர் இலட்சியத்தில் வெற்றிபெற்றுள்ளார்.

சொந்தங்கள் மட்டுமல்ல — அவர் ஆற்றலும், இலக்கியப் பணியும் — அதில் அவர் அடையும் வெற்றியும் தொடர்கின்றன, தொடரும் என்ற நம்பிக்கை நூலைப் படித்து முடித்ததும் ஏற்படுகின்றது.

**— நாவண்ணன்.**

# அவள் ஓர் இளவரசி




அழகான மருதஞ்சோலை, தனிமையான இடம். கிளிகளின் கீச்சுக் குரல்கள் இனிமை பயக்கும். சுற்றிலும் வயல் வெளிகள். வயல் வெளிகளிலே பச்சைப் பசேலெனப் பயிர் வகைகள், கம்பளம் விரித்து விட்டாற் போல். சோலையின் நடுவே நீராழியான குளம்மழைவந்தால் மட்டுந்தான் நீர் தேங்கி நிற்கும்; கொக்குகளும் நிற்கும். வரட்சிக் காலத்தில் இரண்டுமே இருக்காது தாரிணியின் சாம்ராஜ்யம் அந்த மருதஞ் சோலைதான். சின்னஞ் சிறு வயது முதல் அப்படி ஒரு கற்பனை அவளுக்கு! சப்பை வயிறு ராஜீ, சொத்தைப் பல்லு சோதி, பூஞ்சை உடம்பு சரவணன், கிளி மூக்கு கிரிஜா — அவளுடைய பாப்பா சிநேகிதர்கள் இவர்கள் — ஆகியோருடன் விளையாடுவதற்கு அங்கே தான் அவள் வருவாள். அங்கே அவள் தான் இளவரசி. மற்றையோரெல்லாம் மந்திரி பிரதானிகள். அவள் அதிகாரங்கள் தூள் பறக்கும். அழகின் அரசி அவள், ஓர் இளவரசிக்குரிய கர்வத்துடன் ஆணைகளிடுவாள். அவள் எப்போது ஆணையிடுவாளென்று எல்லோரும் காத்திருப்பார்கள். அவள் விழிகளின் அசைவுகளில் அவளது ஆணைகளை எல்லோரும் உடன் சிரமேற் கொள்வார்கள். அவள் சொல்வதைச் செய்வதில் ஏதோ பெருமை கிடைப்பதாக மற்றவர்கள் எண்ணிக் கொள்வார்கள். இது அவளது பால்யப் பருவம்.

பருவங்கள் மாறின. அவளும் அந்தக் காலத்தின் கோலத்தில் மாறினாள். அழகுப் பதுமையானாள். இயற்கை அவளுக்கு அழகை அள்ளிக் கொடுத்திருந்தது. ஒருமுறை பார்க்கின்றவர்களை இன்னொருமுறை பார்க்க வைக்கின்ற அந்த அழகு... மற்றவர்களைத் தன்எல்லைக்குள் இழுத்து ஆட்சிப்படுத்துகின்ற அந்த வசீகரமான கண்கள்...... முதுகின் மேல் நெளிந்து செல்லும் நீண்ட கூந்தல்... சற்றே பருத்த உடற் கட்டானாலும் அதுவே அவளுக்கொரு அழகைத் தந்து கொண்டிருந்தது.

காலத்தினால் அவளை வீட்டில் கட்டுப்படுத்தி வைக்க முடியவில்லை. பருவக் குமரியான பின்னும் அவளால் தன் சாம்ராஜ்யத்துக்குப் போகாமலிருக்க முடிவதில்லை. "இனிமேல் நீயெல்லாம் வெளியே போகக் கூடாதடி" என்று அம்மா சொன்னாள் தான். ஆனாலும் அவள் போகத் தான் செய்தாள். வீட்டில் ஏச்சும் வாங்கினாள். ஏச்சு வாங்கினாலும் அவள் போனாள் — கூட மந்திரி, பிரதானிகள் தான் கிடையாது.

தாரிணி தன்னை இளவரசியாக மனோபாவனை பண்ணிக் கொண்டு, மருதஞ் சோலையில் மரங்களின் கீழ் உள்ள வேர்முடிச்சுகளைச் சிங்காசனமாகக் கருதிக் கொண்டு, அதில் அமர்ந்திருந்து — அல்ல, அல்ல — வீற்றிருந்து கொண்டிருப்பாள். சாதாரணமாக அல்ல. ஓர் இளவரசியின் கம்பீரயத்துடன். முடிவில்லாத இனிய கனவுகள் அவள் விழிக் கோணங்களிலே தேங்கி நிற்கும். நினைவுகள், கற்பனைகள், கனவுகள் எல்லாமே வந்து வந்து போகும் இலேசாக புன்னகையொன்று அவள் வதனத்தில் தவழும்.

"நீ அரச குமாரியடி" அவளது உள்ளம் குரலெழுப்பிக் கொண்டேயிருக்கும்.

"ஓமோம்! அது உண்மைதான், என்று இதழ்க் கடையில் வழியும் புன்னகை அதை ஆமோதிக்கும்.

மருதஞ் சோலை ஓர் ஒதுக்குப்புறமான இடம். அமைதி, மயான அமைதி தான் அங்கு நிலவும். தாரிணியின் கனவுகள கற்பனைக்கு அங்கு என்றும் எந்த இடையூறும் இருந்ததில்லை.

சப்பை வயிறு ராஜீ தன் கடைக்கு அந்த வழியே தான் போய் வருவான். பால்ய சிநேகிதன் என்ற பழைய பழக்க தோஷத்தில் ஒரு புன்னகை அவள் முகத்தில் நெளியும். பாண் துண்டொன்றுக்கு ஏங்கி அதைப் பெற்ற நாயொன்றின் திருப்தியுடன் அவன் அவளைக் கடந்து செல்வான்.

"அடேய் ராஜீ! உனக்குக் கிடைக்காத, உன்னட்டை துப்பரவாயே இல்லாத அழகு என்னட்டை இருக்கடா! ஞாபகம் வச்சுக் கொள்" என்று சொல்லாமல் சொல்லுவது போலிருக்கும் அந்தப் புன்னகை. பால்யத் தோழிகள் இப்பொழுது அவளைக் கடந்து செல்வதில்லை. ஏனென்றால் அவர்கள் வீட்டை விட்டு வெளியே வருவதில்லை.

மருதஞ் சோலையின் பக்கங்களிலே நான்கு கோயில்கள். அந்தக் கோயில்களிலே வருஷமொருதரம் பத்து நாள் திருவிழா நடக்கும். இறுதி நாள் தேர்த் திருவிழா. திருவிழாக் காலங்களென்றால் தாரிணிக்கு ஒரே கொண்டாட்டம். திருவிழாத் தருணங்களில் மட்டும் அவள் மருதஞ் சோலையை மறந்து விடுவாள். துள்ளி ஓடும் புள்ளி மானைப் போல் கோயில் வீதிகளிலே அங்குமிங்குமாக அலைந்து திரிந்து அனைவரினதும் காட்சிப் பொருளாவாள். வெகுளியென நினைத்து யாரேனும் இளவட்டங்கள் அவளிடம் சேட்டைவிட இயலாது. அப்படி நடக்குமாயின் சீறும் நெருப்பாகி அவர்களைத் தகித்து விடுவாள். இரண்டொருவர் அப்படி அனுபவம் பெற்ற பிறகு இளவட்டங்கள் எவருமே அவளை நெருங்குவதில்லை.

திருவிழாக் காலங்கள் என்றால் ராஜீவுக்கும் கொண்டாட்டந்தான். கிராமத்தில் உள்ள தன்நிரந்தரமான கடையைப் பூட்டிவிட்டு, தற்காலிகமான கடையொன்றைக் கோயிலருகே தாபித்து விடுவான். கொள்ளை இலாபம் வரும் அவனுக்கு. சாப்புச் சாமான்கள் முதற் கொண்டு சாப்பாடு வரைக்கும் அவன் கடையில் கிடைக்கும். தாரிணிக்கு மட்டும் அங்கே எல்லாமே இலவசம் விரும்பியதை எடுத்துச் சாப்பிடுவாள்; காப்புகளை எடுத்து அணிவாள். சில வேளைகளில் தங்கியும் நிற்பாள். அந்த வேளைகளில் ராஜீவுக்குப் பெருமை தாங்காது. அவர்கள் இருவரையும் ஒன்று சேரப் பார்த்துவிட்டுப் பெருமூச் செறிந்து கொண்டு போகும் இளவட்டங்களைப் பார்க்கையில் அவனுக்கு ஒரே பெருமிதம்.

"ராஜீ நான் கொஞ்ச நேரம் கடையைப் பார்த்துக் கொள்ளட்டாடா?"

அவள் கேட்பாள்.

அவள் கேட்பதற்குக் காத்துக் கொண்டிருந்தவனைப் போல் "ஓ" வெனத் தலையசைத்து விட்டுச் சிரிப்பான் அவன். அவனுக்கு அவளிடமிருந்து ஒரு புன்னகை பரிசாகக் கிடைக்கும்; பாண் துண்டு பெற்ற நாயாவான்.

இப்படித் திருவிழாக்கள் வந்து போகும்.

கற்பனையில் தன்னை மிதக்க விட்டபடி மருதஞ் சோலையில் கொலு வீற்றுக் கொண்டிருந்த போது அவளை ராஜீ கேட்டான்,

"தாரிணி என்னைக் கல்யாணஞ் செய்து கொள்ளுறியா?"

அவள் புன்னகைக்கவில்லை; சிரித்தாள்; வயிறு குலுங்கச் சிரித்தாள். சிரிப்பு கோபமாகியது.

"அடேய் அலங்கோலமே! உனக்கு இப்பிடி ஒரு ஆசையா? உனக்கு என்ன தைரியமிருந்தா என்னட்ட இப்பிடிக் கேப்பாய்? ஒரு இளவரசிக்குச் சப்பை வயிற்றுக் காறனா புருஷன்?" ராஜீ தலையைத் தொங்க விட்டபடி அகல்கின்றான்.

தாரிணி மறுபடியும் கற்பனைகளில் மிதக்கிறாள். அந்தக் கற்பனைகளில் அவள் மனதுக்குகந்த மணாளன் வந்து வந்து போகிறான். "உயரமாய், ஒல்லியாய், சிவப்பாய், அழகாய்...





ஒருத்தி:- உனக்கு வரப்போகும் கணவர் எப்படியானவராக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறாய்?

மற்றவள்:- சமைக்கத் தெரிந்தவராக இருக்க வேண்டும்!

— க. சிவராசா, நாகர்கோவில்

---

இருக்கும் அவன் என்று வந்து அவளுக்கு மாலையிடப் போகின்றான்? மறுபடியும், மறுபடியும் அவன் அவள் கற்பனையில் வருகின்றான். அவள் கன்னங் குழியச் சிரித்து நாணத்தினால் கண்களை மூடிக்கொள்கின்றாள். அப்படி ஒரு இளவரசனைத் தன் கொழுநனாகக் கற்பனை பண்ணி வைத்திருக்கும் அவளைச் சப்பை வயிறு ராஜீ கேட்கின்றான் தன்னைக் கல்யாணஞ் செய்து கொள்ளும்படி. அவளுக்குச் சிரிப்புச் சிரிப்பாய் வந்தது. அவள் கெக்கட்டம் விட்டுச் சிரிக்கிறாள்.

காலம் காலில் சக்கரம் கட்டிக் கொண்டு பிரமச்சாரிய வேகத்தில் பறக்கிறது,

"அடி தாரிணி! எங்களிட்டையோ ஒரு சீதனமும் இல்லை. ராஜீ கடையாலை நல்லாய் உழைக்கிறான். உன்னைச் சீதனமில்லாமலே கட்டிக்கொள்ளுறன் எண்ணுறான். இதைப் போலை இன்னொரு சந்தர்ப்பம் வராதடி" அம்மா ஒரு நாள் அவளிடம் முணு முணுக்கிறாள்.

ஓ... அவன் இன்னும் நப்பாசையை விடவில்லைப் போலிருக்கிறது என அவள் நினைத்துக் கொள்கின்றாள்.

"அம்மா! அவனை எனக்குப் பிடிக்கேல்லை. அவனை நான் கலியாணஞ் செய்து கொள்ள மாட்டன். இதைப்பற்றி இனிமே என்னட்டைக் கதைக் காதை" தாரிணியின் பிடிவாதம் தாய்க்குத் தெரியும். தனக்கு வரப்போகும் அந்த அழகிய இளவரசனுக்காக அவள் காத்திருக்கிறாள் என்பது அவள் தாய்க்குத் தெரியாதது. ஆனால் அந்த அழகிய இளவரசன் எப்போது வந்து அவள் முன் தோன்றப் போகின்றான்? அது தாரிணிக்குமே தெரியாதது!

நாட்கள் கிழமையாகின்றன!

ராஜீ இப்போது அவளின் புன்னகைகளுக்காகக் காத்திருப்பதில்லை. அவனுக்கு இப்போ பாண் துண்டு தேவைப்படுவதில்லை.

கிழமைகள் மாதமாகின்றன!

தாரிணி தன்னை இளவரசியாகக் கற்பனை பண்ணிக்கொண்டு மருதஞ் சோலையில் கொலுவிருக்கத் தவறுவதேயில்லை.

மாதங்கள் வருடமாகின்றன!

அவள் தன் மானசீக இளவரசனுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறாள்; இனியும் காத்துக் கொண்டிருப்பாள்.

வருடங்கள் ஒன்றன் பின் ஒன்றாகக் கடக்கின்றன!

தாரிணி மருதஞ்சோலையில் இன்னும் வீற்றிருக்கிறாள். வீற்றிருந்து கொண்டே அந்த அழகிய இளவரசனுக்காகத் தபசு பண்ணுகிறாளா? அப்படி ஒருவன் வராவிடில் என்ன செய்வாள்? கன்னியாகவே காலம் கழிப்பாளா?

தெரியாது! தெரியாது!! தெரியாது!!!

அழகின் அரசி அவள் அழகின் அரசனுக்காகக் காத்துக் கொண்டிருப்பது தவறா, என்ன? அது பைத்தியக்காரத் தனமா? யார் சொன்னது?


ஓ... உலகில்தான் எத்தனை விதமான பைத்தியக்காரத் தனங்கள்!

அதில் இதுவும் ஒன்றா......?

புரியவில்லை! புரியவில்லை!! புரியவில்லை!!'

(யாவும் கற்பனை)

---



மகன்:- "அப்பா, அப்பா! எனக்கு நீ ஒரு கதை சொல்வாயே — அந்தக் கதையிலே ஒரு நரி வருமே? அந்த நரி பழக்குலையை எட்டிப் பிடிக்கத் தாவுமே சீ — சீ இந்தப் பழம் புளிக்கும் என்று சொல்லிப் போகுமே? அந்தப் பழம் எனக்குக் கொஞ்சம் வாங்கித் தா அப்பா!"

— யோகன்




மூனு வயது, நாலு, ஐந்து, ஆறு, ஏழெட்டு வயதிருக்கும். ஆறேழு மனித சீவன்கள் அசுர வேகத்தில் ஓடிக் கொண்டிருக்கின்றன. முன்னல் வந்த சைக்கிள்காரன், பின்னலைசத்தத்தோடு அவர்களை மிரட்டுவது போல நெருங்கிக் கொண்டிருந்த 'பீச் ஹோட்டல்' வாடகைக் கார்காரன், நிறைய சாமான்களை ஏற்றி சாக்கடையோடு முட்டி விழப்போகும் இராமையா — எல்லோருமே ஓடுபவர்களின் புலன் உறுப்புகளில் பதியப் பட்டவர்களாக இல்லை.

மூன்றும் குறுக்குத் தெருவால் திரும்பி — நிமிர்ந்திருக்கும் பள்ளிவாசல் சென்றல் ரோட்டுக்குள் வந்தபோது (அம்மோவ்) என்ற ஈனக் குரல் மட்டும் அந்த கூட்டத்திலிருந்டி எழுந்தது.

எட்டு வயது சிறுசொன்று வீதியில் கால் தடக்கி விழுந்த வேகத்தில் முழங்கையும் — வலது முழங்காலொன்றும் தேய்பட்ட வேதனையின் குரல் தான் அது.

"காளி... என்னடா?" — கூட்டத்தில் ஒரு சிறுவன் விழுந்தவனை எழுப்பி புழுதியினை தட்டி விட்டான்.

"ஆ...ஆ...ஆவ்...ஊ..." இரத்தம் கசிந்து கொண்டிருந்த முழங்கைகளைக் காட்டி காளி கத்த ஆரம்பித்தான். "டேய் மருந்து போடுங்கடா...' காளிக்கு உதவிய சிறுவனுக்கு இன்னெரு நாலு வயதுக் குட்டியொன்று ஆலோசனைவழங்கியது.

நாக்கில் ஊறிய எச்சிலை உள்ளங்கையில் எடுத்து ஆள்காட்டி விரலினல் அதைத் தொட்டு காயத்துக்கு தடவினன் ஆலோசனை பெற்ற பெடியன்.

"ஊ...ஊவ்... அம்மாவ்... வலிக்குது... வா அம்மாட்ட... காலைத்தட்டி என்னை விழுத்திட்டு...' காளி கிடைத்த உதவியினைக் கூட தட்டி தள்ளி நன்றியில்லாது பேசினன். அதை, உதவிசெய்த சிறுவன் ஏதுமே பொருட்படுத்தாதவனய்... "சும்மா போடா... கொழுக்கட்டை, நீயெனக்கு ரொட்டித் துண்டு தரல்ல அல்ல, அதுதான் இது வந்திருக்கு." என்று கூறியபடி "வாங்கடா பஸ் ஸ்டாண்டுக்கு" என்றான் கீச்சிட்ட எலிக் குரலில்!

பஸ் ஸ்டாண்டில் மத்தியானம் இரண்டு மணியிலிருந்து பின்னேரம் வரை நல்ல சனக் கூட்டம் இருக்குமென்பது அவர்களுக்குத் தெரியும். அந்த வித்தைக்காரன் கிட்டத் தட்ட ஆறேழு நாட்களாக குறித்த நேரத்தில் தப்பாது வித்தைகள் செய்வதால் இவர்களின் கைகளிலும் பத்தோ, இருபத்தைந்தோ சேர்ந்தே வந்தது.

முற்றவெளி குடிலுக்குள் காலை நீட்டிக் கொண்டு கஞ்சா புகை மயக்கத்தில் இருக்கும் அப்பனுக்கு, அல்லது மானுங் கேணி கள்ளுக் கொட்டிலின முன்னுள்ள பனந்தோட்ட வடலிப் பற்றைக்குள் இருந்து கள்ளு உறிஞ்சும் அம்மாக்கு, அல்லது ஆருமே இல்லாத வெறும் திண்ணைகளுக்கு — கடைக்குந்துகளுக்கு,... தங்கள் உழைப்பைக்காட்ட வேண்டுமென்ற கட்டாயம் அவர்களுக்கு இருந்தது. இல்லாமலிருந்தால்... இவர்கள் இப்படி அனதைகள் என்ற லேபலில் முச்சந்திக்கு வந்திருக்க முடியாதே!

"டேய்...... வித்தைக்காரன்"

"சனம்...... சேரல்லையடா".



"மழை இருட்டு கட்டுது... மழை வந்தாலும்"

"முச்சந்தி பேக் கரிக்காரன் முந்தா நாளு பாணு வைச் சிருப்பான்'

அலைகின்ற மாட்டு மந்தைகள் போல அவர்கள் கனைத் துக் கொண்டு வருவது பீடா விற்றுக் கொண்டிருந்த காதர் மாமாவுக்கு சிரிப்பைத் தான் வரவழைத்தது.

"எண்ட அல்லா... இதுகளின் வாப்பா, உம்மா என்ன செய்யிருங்களோ! இதுக இப்படி நாளு பூராவும் திரிஞ்சா...... இதுக எதிர்காலம்?......" வாயை குதப்பியபோது அவரின் நான்கு குழந்தைகள் முன்னுக்கு வந்து புன்னகை பூப்பது போலிருந்தது.

ஒருவனுக்கு எட்டு வயது, மற்றப பெட்டைக்கு ஆறு. மற்றதும் பெட்டை, மூனு வயசிருக்கும். கடைசியா 72 நாள் குழந்தை. பீடா விற்று வாற நாலு, ஐந்து ரூபாவில இந்த குடும்பத்தில்...... ஆறு பேரு சீவிக்கிறதென்ருல்...... பசி......பசி!

"எண்ட அல்லா...... நான் மௌத்தானப் பிறகுதான்...... நான் விடமாட்டேன். நான் தேஞ்சு இதுகள ஆளாக்கினனென்ருல்...... பிறகு?' பீடா பெட்டிக்குள் இருந்து வாசனை எழுந்தது. மூக்கை உறிஞ்சிக் கொண்ட காதர்......

"அடேய் காளி என்னடா காலில... வா இங்க..." கிட்ட வந்த காளியின் காயத்துக்கு தட்டில் கிடந்த சுண்ணும்பினை போட்ட போது அவர் தகப்பன் உருவில்தான் இருந்தார்.

"ஆ... எரியுது நீ விடு என்னை..." காதரின் கைகளில் இருந்து திமிறினன் காளி. "ஏண்டா... மத்தியானம் ஏதுமே சாப்பிட வில்லையாடா" காதரின் கேள்வியை அசட்டுத் துணிவோடு கேட்ட காளிக்கு, வாயிலிருந்து உமிழ் நீர் சுரந்தது.

"இல்லை... நானு... காட்ட குடிச்சேன்..."

"ஏன் அம்மா எங்க?..."

"அவ - கன்னியாவுக்கு அருவி வெட்ட போற தாய் சொல்லிட்டு போயி 4 நாட்கள் ஆவுது. இன்னும் வரல்ல... தம்பியும் என்னோட தான்..."

"சின்னத்...... தம்பியையா?" — ஏழு மாத பச்சிளங் குழநதையை, காதர் முன்பாக காளி முன்னொரு நாள் காட்டி இருந்தான். "அட...... பாவமே! அந்த பிஞ்சுக் குழந்தை? பாலுக்கு என்னடா செய்யிறே! இப்படியும் ஒரு தாயி இந்த உலகத்தில இருப்பாளா?"

"நானு— தம்பியபின் னேரமா — காளி கோயிலுக்கு முன்பாக இருக்கே — முற்ற வெளி அப்பா பள்ளிவாசல் — அங்க தான் கச்சான் கொட்டய விற்றுக் கொண்டு இருக்கிருவே சவுறுதீனின் உம்மா. அவட்டதான்... அவதான் தம்பிக்கு பாலூட்டுறது. ஒரு ரூபா கொடுக்கணும்.'

"என்ன?" காதர் நானுவின் முகம் கருகிச்சிவந்த போது பீடா வாங்குவதற்காக ஒருவர் குறுக்கிட்டு அவரை குழப்பி விட்டார். பீடா வாங்க வந்தவரின் மேல் காதருக்கு கோபமாகத்தானி

## நவத்தின் பழக்கம்!

மேடைகளில் பேசும் போது ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான பழக்கத்தைக் கைக்கொண்டிருக்கிறார்கள். நாவலர் அமிர்தலிங்கம் பேசும் போது சுட்டு விரலைக் காட்டிக் காட்டிப் பேசுவார். சிலர் 'மைக்'கை பிடித்துக் கொண்டு பேசுவார்கள். சாவகச்சேரி பா. உ. வி. என். நவரத்தினமோ நிமிடத்துக்கு ஒரு தடவை தமது கைக்கடிகாரத்தை திருப்பிப் பார்த்துக் கொள்ளுவார்.

---

ருந்தது. என்ன செய்வது வியாபாரம் போக வேணுமே! வேண்டா வெறுப்போடே காசை வாங்கிப் போட்டுக் கொண்டு காளியைப் பார்த்த போது......

"பாவிப்பயபிள்ளைக... பறந்திட்டாங்களே! ஏழு மாச குழந்தைய விட்டுட்டு வேலைக்கு போக எந்தத் தாய்க்கு துணிவு வரும்? ஒரு ரூபா கொடுத்தா தான் குழந்தைக்கு பாலூட்டுவேன் என்று அடம் பிடிக்கின்ற தாய்களும்..." எல்லாமே அதிசயமாகவும் — ஆச்சரியமாகவும் காதருக்கிருந்தது.

வித்தைக் காரனின் கூட்டத்துக்குள் நுழைந்த காளிப்பயலோடு சவுறுதீன் — முனிப்பயல் — கோணன் — சுனில் — தாச — கங்கா ... இப்படி ஒரே செற்றாக சுற்றி ... சுற்றி வந்தார்கள்.

"ஐயா — எனக்கு அம்மா இல்லைங்க...... பசிக்குது."— "அப்பா செத்துப் போனர். அம்மாக்கு ஆப்பரேசன்..." பழைய பல்லவி பாடல்கள் மிக நளினமாக, சொற்தொடர்கள் நில்லாத குழைவோடு, வேகமாக வந்து கொண்டிருந்தன. ஐம்பது பேருக்கு ஒருவரின் செவிதான் — இவர்களின் குரல்களை ஏற்று... ஒரு சதமோ, இரண்டு சதமோ கொடுக்க வழி பண்ணின. மிகுதி? 49 பேரும் வித்தைக் காரனின் வேடிக்கையில் தான் லயித்திருந்தார்கள்.

சுனிலுக்கு ஆத்திரமாகவும், பசியின் வேகத்தால் உடலும் படபடத்துக் கொண்டிருந்தது. காளியினை மெல்ல சுரண்டினன். "டேய்...... அந்த களிசான் காரனின் சாக்கைப் பார் மணிபேர்ஸ் தெரியுது. அடிப்பமா?"

தம்பிக்கு பால் ஊட்டுவதற்கான கூலி ஒரு ரூபாயினை தேடி இருந்த காளிக்கு, சுனிலின் பேச்சு இதமாக இருந்தது.

"சரிடா..." காளி சொல்லி விட்டு மெல்ல தயங்கினன். போன கிழமை இப்படியொரு வரிடம் அடிச்சு, பிடிபட்ட போது, அடிபட்ட வேதனைகள் நினைவில் வந்தன. அதோட இன்றைக்கு ரோட்டில் விழுந்த போது உண்டான காயமும் எரிவைக் கொடுத்துக் கொண்டிருந்தது.

"சுனில் — நான் வரல்ல. நீ போய் எடு. என்னையும் கவனி". சொல்லிவிட்டு கூட்டத்தின் மற்றப் பகுதியினைக் காளி அடைந்து இரு நிமிட நேரத்தில்...

சுனிலின் அறலல் கேட்டது.

"காவாலிப் பசங்க. பிச்ச பிசாசுகள். யார், யார் பெற்றுப் போட்டு இப்படி முச்சந்தி வழிய அலைய விட்டிருக்குது களோ!" யாரோ நல்ல மனிதர் பேசுவதும் காளிக்கு கேட்டது.

மெல்ல திரும்பி...... கோணேஸ்வரா கபே மெயின் ரோட்டுக்கு பஸ் ஸ்டாண்டில் இருந்து ஏறியபோது சவுறுதீன், காளியின் அருகினில் வந்தான் காளிக்கும் சட்டென யோசனை யொன்று உதித்தது:

"டேய் — சவுறுதீன்......"

"என்னடா......"

"எனக்கு ஒரு உதவி செய்வியா?"

"என்ன?"

"உன் அம்மாட்டை சொல்லி — என் தம்பிக்கு பால் ஊட்டச் சொல்லுறியா? என்னட்ட இப்ப முப்பது சதமிருக்கு. மிச்சத்த நாளைக்கு தாரன்..."

"எனக்கு முடியாதுடா. உம்மா என்னை கொன்று போடும்"

சவுறுதீன் உம்மாவின் அடிக்குப் பயந்து பாய்ந்தோடினன், சுனிலுக்கு அடி விழுந்த கூட்டத்திற்குள்.

காளி பரிதாபத்தோடு கண்களை நிலத்தே சாய்த்தபோது, அவன் கரங்களில் ஒரு ரூபாய் குத்தியொன்று வந்து விழுந்தது. காளியின் பின்னல், காதர் நானு நின்று கொண்டிருந்தார்:

"காளி... நீ என்ர பிள்ளைகளில் ஒன்று போல. இன்றைக்கு நான் சாப்பிடாட்டி என்ன செத்தா போயிடுவேன். பிஞ்சு பிள்ளைக்கு நீ பாலை ஊட்டுவி. உனக்கு, தைரியமா உழைக்க வழி இருக்கு. நாளைக்கு நீ என்னட்ட வா காட்டுறன்". காதர் நானுவை காளி நன்றியோடு பார்த்தான்.

சுனிலைச் சுற்றி நிற்கும் முச்சந்தி பெடியன்கள் கூயா, மயா போட்டு கேலி பண்ணுவது கூட காளிக்கு இப்போ கேட்கவில்லை.

அவன் பெரியவனுகி விட்டான். அவன் ஏன் இனி இந்த கூட்டத்தில் சேரப் போகின்ருன்?

— யாவும் கற்பனையல்ல

---

## ஓர் ஓட்டல் விளம்பரம்:

"இங்கே ஒருமுறை சாப்பிடுங்கள். வேறெங்கேயும் மறுபடியும் சாப்பிடவே மாட்டீர்கள்"

— யோகன்

---

# கலிங்கம் காட்டும் களமகளிர்

கலிங்கத்துப் பரணி. செயங்கொண்டார் படைத்த கவிதைக்களம். புனைந்துரை அல்ல. குலோத்துங்க சோழன் விதந்துரை. அங்கே ஒரு காட்சி.

செங்குருதி தவழ்கின்ற செருக்களத்தே செக்கச் சிவந்த சிங்காரக் கட்டழகி ஒருத்தி வருகின்ருள். தன் காதல் பெருந்தலைவன் — உடம்போடு உயிரிடை மற்றன்ன மடந்தையொடு எம்மிடை நட்பு என்ற வள்ளுவத்தின் குறளோவியமாக காதல் வளர்த்த இன்னுயிர்த் தலைவன் — தன் உயிர் சோர்ந்து — தாய் மண்ணில் தன்னுடல் சாய்த்துக் கிடக்கும் காட்சியைக் காண்கின்ருள். கண்களிலே கண்ணீர் துளிர்க்கிறது நெஞ்சினிலே துயரம் நிறைகிறது. ஆயினும் அவள்ா முறமெடுத்துப் புலயடித்த வீர மங்கையர் குலக் கொழுந்து. முதுகுப்புண் காணின் முலையறுக்க முடிவெடுத்த வீரதாய்க் குலத்தின் விழுமிய செல்வி. அவள் புலம்புகிருள். இல்லை. தமிழ்க் குல மகளிர் குணமிது என்று கூறுகின்ருள்.

"பொருதடக்கை வாளெங்கே?
மணி மார்பெங்கே?
போர்முகத்தில் எவர்வரினும்
புறங் கொடாத
பருவயிரத் தோளெங்கே?
எங்கே? என்று
பயிரவியைக் கேட்டாளைக்
காண்மின்! காண்மின்!

போர் செய்யும் உன் பெரிய கைகளிலே சுழலும் வீர வாளெங்கே? வெற்றி மங்கை முகம சாயக்கும் மணி மார்பெங்கே? எவர் வரினும் அஞ்சாது அமர் செய்து வீரவாகை சூடும் புறங்காணு வைரத் தோளெங்கே? என்று அவள் புலம்புகிருள். இந்த வீரத்தின் வெளிப்பாடு வீரத்தின் திருவுருவாய் விளங்கிடும் கொற்றவைக்கு கூட புதுமைக் காட்சியாகி — அந்த கொற்றவையே தன் சுற்றத்தை அழைத்து வந்து பயிரவியிடம் வீரநாதம் செய்கின்ற அந்த மறப்பெண்ணை — வீரத் தமிழ்ப் பெண்ணை காட்டுவதாக காவிய நயம மிளிர எம் கண்முன்னே பண்டைத் தமிழ் மகளிர் வீரத்தைச சொற்சித்திரமாக்குகின்ருர் செயங்கொண்டார்.

ஹோமரின் வீர காவியங்களில் கூட காணுத அற்புதக் காட்சி. அவள் புலம்புகிருள். ஆனல் அங்கே பாசத்தின் பிதற்றல்கள் இல்லை. பழகிய கதைகள் இல்லை. வெற்று வார்த்தைகள் இல்லை. வீரம் விளையாடும் வார்த்தைகள் — பண்டைத் தாய்க்குலத்தின் நெஞ்சுறுதியை பாருக்குப் பறைசாற்றும் வார்த்தைகள். ஈழத்தாய்க்குலமே — என்னினிய தமிழ்க்குலமே இவ்வீர மங்கையை — செயங்கொண்டார் செப்பிய சொல்லோவியத்தை நிழலோவியமாக உன்னிதயத்தே எண்ணிப்பார். எத்தகைய பெருங்குணம் படைத்தவள் தமிழ்ப்பெண் என்பது உனக்குப் புரியும். வீரமும் காதலும் இரு கண்ணெனக் கொண்டார் பழந்தமிழ் மகளிர் இதுவே எம் பழம்பெருமையின் பார்புகழும் வரலாற்றின் இரகசியமும் கூட.

வீரப்பாலூட்டி — முன்னைப் பெருமை சொல்லி வளர்த்தாள் பெற்ற அன்னை. காதல் சுவையூட்டி — களத்திலே சாதனை செய்தாலே என் இதயம் தருவேன் உனக்கென்று சூளுரைத்து அவனைக் காவியமாக்கினுள் காதற பெருந்தலைவி. அடிபணியாதே — அடிவருடாதே என்று ஆணவமூட்டி தன் மானம் தந்து நின்ருள் உற்ற துணைவி. விழியென்னும வேலெறிந்து செருக்களத்தே வேலெறிய வைத்ததினுல் ஆண்களிடை வீரம் விளையாடியது. பொங்கு கடல் வென்று — தங்கு பகை

---

## பதினறு பேறுகள் எவை?

தங்கள் மாசி இதழில் 'தமிழக நினைவுகள்' பகுதியில் திரு. விசுவநாதம் கூறிய தாக மாடு, மனை, மனைவி, மக்கள், கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம், நிலம், நீர், வண்டி, வாகனம், பொன், பொருள், மோகம், புகழ் என்பன பதினறு பேறுகள் என குறிப்பிட்டிருந்தீர்கள். ஆனல் க. சி. குலரத்தினத்தை ஆசிரியராகக் கொண்ட 'மில்க்வைற் செய்தி' 31-3-76 இதழில், புகழ், கல்வி, வலிமை, வெற்றி, நன்மைகள், பொன், நெல், நல்லூழ், நுகர்ச்சி, அறிவு, அழகு, பெருமை, இனிமை, துணிவு, நோயின்மை, வாழ்நாள் என்பன பதினறு பேறு எனக் குறிப்பிட்டிருந்தார்கள். இதில் சில சொற்கள் இரணடிலும் ஒற்றுமையாக விருந்தாலும் பல சொற்கள் வேற்றுமையாகவுள்ளன. முற்றும் சரியான பதினறு பேறு எது?

— செல்வி. சி. ஈஸ்வரி
உடுப்பிட்டி.

---

# கவிதை பிறக்கவில்லை

நள்ளிரா வான பின்னென்
நாயகி படுத்துத் தூங்கி
மெல்லிய குறட்டை விட்டு
மெத்தையிற் சரிந்த பின்னர்
உள்ளிருந் தென்னைக் கொல்லும்
உணர்வினைக் கவிதை யாக்கி
அள்ளிட; வெளியே வந்து
அமர்ந்தபின் நிமிர்ந்து பார்த்தால்...

நீலவான் திரையில் எங்கும்
நித்திலப் பூக்கள் பூத்துக்
கோலங்கள் காட்டி மின்னும்
கொல்லையிற் பூத்த முல்லை
சாளரம் புகுந்து வந்து
சதிரிடும்; தென்றல் எந்தன்
வாலிப உணர்வைத் தட்டி
வளைத்துமே பிடித்துக் கொள்ளும்.

பக்கத்து வீட்டில் பிள்ளை
பாலினுக் காகக் கத்தும்.
உக்கிய கிடுகு வேலி
உரஞ்சியோர் சத்தம் போடும்,
முக்கிய நேரம் பார்த்து
மூலையிற் பூனை சீறும்.
தக்கதோர் கவிதை வந்து
சனிக்கமுன் அழிந்து போகும்

வாசலிற் படுத்த நாயோ
வள்ளெனக் கத்தும்; அந்த
ஓசையால் எழுந்த எந்தன்
உத்தமி என்னைத் தேடி
ஆசையோ டருகில் வந்து
அணைத்திடக், கவிதை நெஞ்சோ
நாசமாய்ப் போகும், பின்னர்
நடப்பவை எழுதாப் பாடல்

உணர்வெலாம் உணர்ச்சி மேவி
உருப் பெறத் துடிக்கும் போது
கணத்திலே கோடி யாகக்
கவிதைகள் குதிக்கும்; இந்தா
நினைத்ததும் கவிதை யென்றால்
நிகழ்த்தலாம் கூத்து, ஆனால்
மணத்திடும் கவிதை யெல்லாம்
மலர்ந்திடத் தனிமை வேண்டும்

கனிச்சுவை ஊறி யுள்ள
கவிதைகள் பழுக்க; நல்ல
தனிமையோ டமைதி வேண்டும்
தண்ணொளி நிலவு; தென்றல்
பனிமலர், எதுவு மில்லாப்
பக்கமாய் அமர்ந்து கொண்டு
கனவிலே மிதந்தாற் போதும்
கவிதைகள் எழுந்தே மோதும்

— பரணிமூலன்

வென்று சங்கு முழங்கி சரித்திரம் படைத்தார் அன்னவரும். இதுதான் வெற்றியின் இரகசியம். பேதைப் பெண்ணே! புரிகிறதா உன் சக்தி! நீதான் தமிழ்க்குலத்தின் உயிர். உன் கையிலேதான் எம் வாழ்வும் — தாழ்வும் — எழுச்சியும் வீழ்ச்சியும்.

செக்கச் சிவந்த கழுநீரும் — செத்தில் இளைஞர் ஆருயிரும் — ஒக்கச் செருகுங் குழல் மடவீர்! என்று செயங்கொண்டார் உன்னை விழித்தார். ஆம் நீ செக்கச் சிவந்த செங்கழுநீர் மாலையை மட்டும் சூடவில்லை இளைஞரின் ஆருயிரையும் சேர்த்துச் சூடுகின்றாய். ஆகவே இளைய சமுதாயத்தின் பேரியக்கச் சக்தி நீதான். உன் மென்கரம் அசைந்தால் எம் அடிமைத்தளை பொடிப் பொடியாகும். உன்மனம் தாழ்ந்தால் எம்மின மானம் தாழும். ஆகவே வீரப்பாலூட்டு — எந்தை இராவணன் வீரம் சொல்லி தாலாட்டு — முந்தையை முந்தும் முத்தாக உன் மகன் மாறுதல் காண்பாய். எங்கள் பகைவர் எங்கோ மறைவார். அதையும் செயங்கொண்டாரே உனக்கு கவிதைக் காட்சியாக காட்டுகிறார்.

"ஒருவர் ஒருவரின் ஓட முந்தினர்
உடலின் நிலிழனை ஓட அஞ்சினர்
அருவர் வருவரென விறைஞ்சினர்
அபயம் அபயம் என நடுங்கியே"

அருவர் — தமிழர் — என்றால் பகைவர்க்கு எத்தகைய பயம் ஏற்படுகிறது பார்த்தாயா? இந்தப் பேயோட்டம் பகைவரை ஓடிட வைக்கும் உன் சந்ததி இன்று சங்கக் கடையில் சரணாகதி அடையும் சரித்திரத்தை கண்டும் நீ வாளா இருப்பதென்ன? கூட்டுறவு வேலைதேடி தமிழுறவு துறக்கின்ற துரோகக் காட்சி கண்டும் கண்மூடி இருப்பதென்ன? பிச்சை வாழ்வு வாழும் இச்சை மனிதர்களாய் மாறிவிட்ட உன் மக்களை — வீரச் செல்வங்களாய் மாற்றிடும் பெரும் பணி உனது கையில் என்பதை மறந்துவிடாதே. உன் அன்பால் — காதலால் வீரத்தை ஊட்டி —உன் நெஞ்சுறுதியால் தமிழன் அடிமையாகவும் மாட்டான் — அடிமை கொள்ளவும் மாட்டான் என்பதை நிலைநிறுத்தல் உன் பெருங்கடன். இதனை நினைவூட்டியே நின்கவி பாரதி

"வலிமை சேர்ப்பது தாய் முலைப்பாலடா
மானஞ்சேர்க்கு மனைவியின் வார்த்தைகள்
கலியழிப்பது பெண்களறமடா
கைகள் கோர்த்து களித்து நின்றாடுவோம்"

என்று பாடினான். ஆகவே தமிழ்ப் பெண்ணே — எழுக உன் பழமை வீறுடனே — தருக புதியதோர் சக்தி — அந்தச் சக்தியின் வலிமையிலே மலரும் ஈழத் தமிழகம் என்று ஒரு நாடு.

— கரன்

''பெரியோர்களே! இப்போது 'ஒழுக்கவாழ்வு' பற்றி சைவப்புலவர், பண்ணிசைமணி, அறநெறிக்காவலர் பண்டிதமணி, கதாகாலேட்சப மணி திரு. அருள் நடராஜன் அவர்கள் ஒரு இசைச் சொற்பொழிவு ஒன்றை நடாத்துவார். எனவே நீங்கள் அமைதியாக இருந்து அந்த இசைவிருந்தை கேட்டு அதன்படி ஒழுகுவீர்களாக என்று கேட்டுக் கொள்கிறோம்''

இப்படி அந்த நகரமண்டபத்தில் கூடியிருந்த பெரியார்களுக்கு தலைவர் முழங்கிக் கொண்டார். கைதட்டுக்களின் மத்தியில் அருள் நடராஜன் மேடையில் காட்சியளித்தார். பார்த்தாலே போதும் முகத்தில் அருள்தான். சைவப்புலவர் என்ற முத்திரைகள் அவரிடம்ஏராளம்.

''விநாயக அடியார்களே! எனது சொற்பொழிவைக் கேட்க வந்த பெரியோர்களே! தங்களுக்கு என் ஒழுக்க வணக்கம்''

இப்படியாக பல்லவியைத் தொடங்கிக்கொண்டார். விநாயக அடியார்களும், மிகவும் கவனத்தோடு அமைதியாக இருந்து கொண்டனர்

கதாகாலேக்ஷபம் களைகட்டி இரசிகர்கள் 'சபாஷ்' போடுமளவுக்கு ரொம்ப உச்சத்தில்நடந்து கொண்டிருந்தது.

''எந்தச் சூழ்நிலையிலும், எந்தச் சந்தர்ப்பத்திலும் ஒவ்வொருவரும் ஒழுக்க சீலர்களாக, ஒழுக்கமகனாக நடக்க வேண்டும். பெண்மைக்கு எப்படிக் கற்பு இருக்கிறதோ, அப்படியே ஆண்மைக்கும் கற்பு உண்டு. ஆண்மையின் கற்பை அளவிட ஆண்டவனிடம் தான் கருவி உண்டு.,,


இப்படி ஒரு கட்டத்தில் அடியார்களுக்கு அருள் நடராஜர் சொன்னார்.

தெய்வம் சொன்ன வாக்காக எல்லோரும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர். அவரிடம் பண்ணிசை பயில வரும் மாணவ, மாணவிகளும் குரு சொன்ன அந்த அமுத வாக்கை உள்ளத்தில் இரண்டு பிரதிகளில் பதித்துக் கொண்டனர்.

''இவ்வளவு நேரமும் அமைதியாக இருந்து கேட்ட உங்களுக்கு இறைவன் அருள் பாலிப்பானாக. நீங்கள் கேட்டதுபோல ஒழுக்கவாழ்வில் ஒழுகுவீர்களாக!''

என்று இரண்டு மணித்தியால கச்சேரியின் பின் 'மங்களத்தை முடித்துக் கொண்டார்' அடியார்கள் அருள் நடராஜரின் சொற்பொழிவுகளை உள்ளத்திலே ஊறச் செய்து, திருப்தியோடு, வீட்டை நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர். சிஷ்யர்களும் குரு வணக்கம் செய்து பெற்றோர்களுடன் வீட்டுக்குச் சென்றனர்.

உப்பிடி ஒருநாளும் கேட்கேலையடி! என்ன மாதிரிப் பிரசங்கம் பண்ணினார்! எல்லாச் சனமும் என்ன மாதிரி இருந்துகேட்டுதுகள்! சா...! ஒருக்கால் அவரைப் பார்க்க வேணும்போலக்கிடக்கு''





றோட்டில் வள்ளியம்மையும் கமலமும் கதாகாலேக்ஷபம் கேட்ட அத்தனை பேருக்கும், அருள் நடராஜரின் உருவம், திருச்சின்னங்கள் எல்லாம் கண்ணுக்குள் நிற்கிறமாதிரி.

'எட்டாம் திருவிழாவுக்கும் இவற்றை தானும்!''

''உண்மையாய்த் தானே?!''

''எனக்கு ஐயர் சொன்னவர்''

''கட்டாயம் வரத்தான் வேணும்''



ஒருவர்:- நான் சுடுபட்டுச் சாகவிரும்புகிறேன்'

மற்றவர்:- ஏன்?

ஒருவர்:- அப்படியானல்தான் நான் இறந்தபின்பு எனக்குச் சிலை வைப்பார்கள்!

கே எஸ். ராஜா, நாகர்கோயில்

---

"நீபோகேக்கை என்னையும் கூப்பிடு"

அதே கமலமும், வள்ளியம்மையும தான் தொடர்ந்தும்;

"பச்சைக்குழத்தையடி கண்ணில் பாவையடி சந்திரமதி..." இசைவகுப்பு நடந்துகொண்டிருக்கின்றது. மாணவ, மாணவிகள் சுருதியோடு பாடிக்கொள்கின்றனர்:

"இச்சைக் கினியமது என்தன் இருவிழிக்குத் தேனிலவு" வாஜி இராகத்தின் உயிர், அருள் நடராஜரின் குரலில் ஈடாடிக் கொண்டிருந்தது. கேட்பவர்களுக்கு எப்படியிருக்கும்? மாணவிகள் பாடுகையில் குருவுக்கு எப்படியிருக்கும்? குருவின் அந்தப்பாட்டில் மாணவ, மாணவிகள் எல்லோரும் மயக்கம். இல்லை! ஒரு விதக் காதல்! இல்லை, ஒரு தனிச்சுவை, அதேபோல் குருவுக்கும் மாணவ மாணவிகள் பாடுகையில்.

"நான் சொல்லித்தாறன். நீங்கள் ஒருக்கால் பாடுங்கோ"

அவள் என்னதான் செய்வாள். சத்தியாவையே எல்லோரும் பார்த்தார்கள்.

"இச்சைக் கினியமது என்தன் இரு விழிக்குத் தேனிலவு சத்தியாவுக்கு ஒருவித வெட்கம். அந்த வெட்கமே ஒரு தனி அழகு அவளுக்கு.

"ம்......பாடுங்கோ"

"இச்சைக்கினியமது என் தன்......"

சத்தியாவும் "இச்சைக்கினியமது என்தன்......" என்று அந்த இனிய குரலில் பரப்பிக்கொண்டாள்'

'சபாஷ்! சபாஷ்! பலே! பலே!"

அருள். நடராஜருக்குச் சொல்லாமலே இருக்க முடியவில்லை: சத்தியாவுக்கும் குரு சொல்லக் கிடைச்சுக்கிடக்கே!

"சத்தியா போல பாடவேணும் பிள்ளையள் சரியா"

திரும்பவும் அந்தவரியை மீட்டிக்கொண்டார். சத்தியாவைப்போல ஒருதரும் பாடினபாடில்லை. அருள் நடராஜரின் குரலோடு, சத்தியாவின் குரல்களை கட்டிக்கொண்டது.

"நாளைக்கு கச்சேரியிலை இந்தப் பாட்டுப் பாடவேணும். தனிய இல்லை. என்னேடு சேர்ந்து. இன்னுமொருக்கால் சொல்லித்தாறன். கவனமாகக் கேட்கவேணும். சத்தியாவோடை சேர்ந்து எல்லோரும் பாடவேணும் சரியா..!"

"பச்சைக் குழந்தையடி கண்ணில்......" சத்தியாவின் குரல் முன்னணியில் ஒலித்துக் கொண்டது. சத்தியாவுக்கு நல்ல சான்ஸ் அடிச்சிருக்கு! என்று ஏனைய மாணவர்கள் எண்ணிக்கொண்டனர்.

"சத்தியா குருவோடு சேர்ந்து கச்சேரி பண்ணப் போருள். எங்கன்ரை பிள்ளை நாளைக்குக் கச்சேரி பண்ணப் போருள்."

பெற்ருேருக்கு மகிழ்ச்சி.

"சட்டை இருக்கே பிள்ளை. பூமாலை! காப்பு! மோதிரம். பொட்டு! மணிக்கூடு!"

ஒழுங்காக அலங்கார அணிவகுப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தது,

அந்த ஒரு பாட்டுப் பாடுவதற்காக, அருள். நடராஜாவின் வீட்டில் சத்தியாவுக்கு ஒத்திகை. தகப்பனும் சத்தியாவை விட்டுவிட்டு வீட்டுக்குப் போய்விட்டார். அண்டைக்கு என்று சம்சாரமும், பிள்ளைகளும் கலியாணவீட்டுக்கு பலகாரம் சுடப்போட்டினம. பூனை இல்லா வீட்டுக்கு எலிக்குக் கொண்டாட்டம். குருவின் நம்பிக்கையில் சத்தியாவின் தகப்பன் நிம்மதியாய் உறங்கிவிட்டார் வீட்டில்.

அந்தப்பாட்டு, இராகம் இருவருக்கும் என்னவோ செய்யிற மாதிரி. ஒரு மயக்கம். வலு உற்சாகம். இல்லை. வலு நெருக்கம்

"பச்சைக்குழந்தையடி..."

வலுநெருக்கமாய் ஒத்திகை. பிள்ளைக்குக் கொஞ்ச வயதே! வடிவான குமர். முனிவனையே

---



ராணி:- நேற்றைய கச்சேரியில் எல்லோரும் என்னையே பாராட்டினர்கள்!

ரஜனி.- ஏன் உன் கச்சேரி அவ்வளவு திறமையாகவா இருந்தது?

ராணி:- இல்லையடி, நான் கட்டியிருந்த சேலைக்காக!

ரஜனி:- .........???

பா. பாலசூரியன்-வடஅளவை.

சும்மா விட்டதில்லை. இந்தக் குருவைச் சும்மா விடுமா? சத்தியாவுக்கும் புதுச் சூழல், பெற்றோலுக்குக் கிட்ட நெருப்பு இருக்கு. அபாயம் தான். அபாயம் என்று எழுதிப் போட்டாலும் நெருப்பு பத்தாமல் விடுமா?

"பெண்மைக்கு எப்படிக் கற்பு இருக்கிறதோ அபபடியே ஆண்மைக்கும் கற்பு உண்டு"

அன்றைய திருவிழாவில் அருள் நடராஜரின் கதாகாலேஷபம்; சத்தியாவும் இதைக் கேட்டுத்தான் இருப்பாள்.

குருவுக்கு ஆசையை அடக்கவே முடியவில்லை. அந்தப் பச்சைக் குழந்தை சத்தியா குருவினால்! இல்லை! அருள் நடராஜனால்! இல்லை! அறநெறிக் காவலரால்ஆட்கொள்ளப்பட்டாள். இல்லை குருவின் ஆசீர்வாதம்.

அந்தப் பச்சைக் குழந்தையின் அடக்கமாய்இருந்த உணர்ச்சிகள் இராகம் பாடத் தொடங்கின.

"சத்தியா! சத்தியா!" படலையில் சத்தியாவின் தகப்பன்.

"வாங்கோ" என்று கூறியபடி அருள் குரு!

"பஸ் ஒண்டும் இல்லை. அது தன் லேற்றுப் போச்சுது. தங்கச்சி சாப்பிடவும் இல்லை"

"இல்லை அவ இங்க சாப்பிட்டவ பாருங்கோ"

"இந்தாபிள்ளை இதையும் சாப்பிடு"

"வேண்டாம் அப்பா! நான் நல்லாச் சாப்பிட்டன் அப்பா!"

"நாளைக்கு எத்தனை மணிக்கு கோயிலுக்கு..."

"நாலுமணி போல வாங்கோவன்', என்று விடையளித்தார் அருள் குரு. சத்தியாவும், தகப்பனும் விடை பெற்றுக்கொண்டு சென்றார்கள்- ருசி கண்ட பூனையைப்போல சத்தியா அன்றைய இரவு அவள் திரும்பவும் ஒருமுறை ஒத்திகை. அந்தக்காட்சியை மறக்கவே முடியவில்லை.

நாலு மணிக்குத் தான் வரச் சொன்னாலும், மூன்று மணிக்கே வெளிக்கிட்டுக் கொண்டனர். குருவையும் அழைத்துக் கொண்டு கோயிலுக்குப் புறப்பட்டனர்.

நேரம் எட்டுமணி.

"பெரியோர்களே! இன்றும் அருள் நடராஜன் அவர்கள், அவரது மாணவியுடன் சேர்ந்து ஒரு கதாகாலேக்ஷப இன்னிசை விருந்து அளிப்பார்கள், அவருடைய திறமை ஒழுக்கம் காரணமாக,அவருக்கு பக்தசிரோன்மணி என்ற பட்டத்தை அளித்து கௌரவிக்க இருக்கிறோம்"



அடியார்களின் கைதட்டல்.

"பக்த அடியார்களே! பெரியோர்களே! இன்று "பக்தியும் வாழ்வும்' என்னும் பொருள்பற்றி,எனது சிஷ்ஷையுடன் சேர்ந்து கதாகாலேஷப இன்னிசை விருந்தை உங்களுக்கு இறைவனருளால் அளிக்க இருக்கின்றேன்".

என்று பழைய பல்லவியுடன் அருள் குருவானவர் தொடங்கினார். சத்தியாவின் தகப்பனார் அச்சுவேலியிலும் மகளுடைய கச்சேரியை அருள் குருவானவருடன் சேர்ந்து வைக்க எண்ணிக் கொண்டார்,அப்போஅதற்கு ஒத்திகை......?

(யாவும் கற்பனை)

# வளவை வளவனுக்கு பதிலளிக்கிறர் முகவை திராவிடதாசன்!

**வை**காசித் திங்கள் சுடரில் வெளியான திரு. வளவை வளவனின் 'சக்தி சிரிக்கின்ருள்' கவிதை ஸ்ரீ ச. து. சு. யோகியார் அவர்கள் பராசக்தியை வியந்து பாடிய கவிதைகளை ஒத்திருந்ததுடன் அவற்றின் மறுவடிவமாகவே காணப்பட்டது. இக் குறிப்பை ஆனித் திங்கள் சுடரில் வெளியிட்டேன். அதைக் கண்ணுற்ற திரு. வளவன் அவர்கள் கீழ்த்தரமான வாக்கியங்களினுல் கேவலமான முறையில் என்னைக் கண்டித்துள்ளார்.

இவரின் கூற்றிற்கு பக்கம் பக்கமாக பதில் எழுத விரும்பவில்லை. தக்கவிடை பகர வேண்டுமென எண்ணுகின்றேன். 'சக்தி சிரிக்கின்ருள்' கவிதையைத் தான் எங்கும் திருடவில்லையென்றும், யோகியாரின் கவிதையின் மறுவடிவமல்லவென்றும், ஒத்த சாயல் உள்ளதல்லவென்றும் உரைக்கின்ருர். அப்படியாயின் யோகியாரின் கவிதையொன்றையும் திரு. வளவன் அவர்களின் கவிதையொன்றையும் ஒப்பு நோக்குவோம். இதோ! யோகியார் பராசக்தியை வியந்து பாடிய கவிதையொன்று;

**சட்டச் சடசடக் கொட்டும் இடிக்குரல்**
**சத்தத்தில் வீற்றிருப்பாள்**
**வெட்டி அடித்திடும் மின்னல் வெறியினுல்**
**மெட்டி மினுக்கிடுவாள்**
**துட்டர் பயப்படச் சிட்டக் களித்திடக்**
**தோத்திரம் பாடிடுவோம்.**
**பட்டின் மெதுவும் பதத்தினில் வீழ்ந்து**
**பரவசம் எய்திடுவோம்.**

இதே சாயலுள்ள திரு. வளவன் அவர்களின் கவிதை ஒன்று;

**இடிஇடித்திடும் கார்முகில் மோதலில்**
**மின்னலென வருவாள் — வானம்**
**கொடு கொடுத்திடச்சீறும் புயலென**
**கடி தெனவே வருவாள் — மாந்தர்**
**நடுநடுங்கிட அக்கினித் தீபமாய்**
**புவியைக் கிழித்திடுவாள் — கடல்**
**கடுகடுத்தோடித் தரையை விழுங்கிடச்**
**சக்தி சிரிக்கின்ருள்.**

யோகியாரின் கவிதை இன்னென்று;

**''திக்குகள் எட்டும் சிதறித் திடுக்கிடக்**
**கெக்கலி கொட்டிடுவாள்**
**பொக்கென ஓர்கணத்தே அண்டம் யாவையும்**
**பொட்டென வெட்டிடுவாள்.''**

இக்கவிதையை ஒத்த வளவனின் கவிதை;

**''அட்டதிசை யெங்குந்தான் சிரிப்பாள் — இவ்**
**அகிலங் குலைந்தாட — எழில்**
**கொட்டும் பொழில்தனில்தான் நகைப்பாள் நிதம்**
**கட்டுக் குழைந்தாட — வரும்''...**

வளவனின் மற்ருேர் கவிதை;

**''அண்டங்கள் ஆயிரம் அந்தரமாகவே**
**பந்தெனவே ஆட''......**

இதை யொத்த யோகியாரின் கவிதை வருமாறு;

**அண்டகள் யாவும் குலுங்கிடக் கிண்கிணி ஆட்**
**[டங்கள் காட்டிடுவாள்**
**கொண்டல் நடுவில்......**

எனவே இவ்விருவரின் கவிதைகளும் ஒத்திருக்கின்றதா? இல்லையா என்பதை யாரிடம் கேட்க வேண்டுமென்று எனக்குப் புரியவில்லை.

அடுத்து திரு. வளவன் அவர்கள், தன்னுடைய திருட்டுத் தனத்தை தக்க ஆதாரத்துடன் நிறுவத் தவறின் என்னுடைய கூற்றை மீளப் பெறல் வேண்டுமெனக் கேட்டிருந்தார். திரு. வளவன் அவர்கள் கூறியபடி உண்மையாகவே அவருடைய கற்பனைத் திறனினுல் புனையப் பட்டதாக இருந்தால் செய்தகுற்றத்தை ஏற்றுக் கொள்வது கற்ருேரின் கடன் என்பதற்கிணங்க என்னுடைய கூற்றை மீளப் பெறவும் தயங்கமாட்டேன். இறுதியில் தெய்வப் புலவரின் திருவாக் கொன்றை கூற விரும்புகின்றேன்.

**சால்பிற்குக் கட்டளை யாதெனின் தோல்வி**
**துலையல்லார் கண்ணுங் கொளல்.**

---

## புதிய நீதி

ஆபத்தான மிருகத்தைக்கூட
ஆறடிக் கூட்டிலேதான்
அடைத்து வைக்கிருர்கள்
ஆறறிவு படைத்த இவனையோ
நாலடிக் கூட்டினுள்ளே
நாற்புறமும் காவலர்கள்
கண்ணிமையாது காக்கிருர்கள்.
கைதி செய்த குற்றமோ -
தமிழனுய்ப் பிறந்து
தன்னுரிமை கேட்டதுதான்.

—"இளமதி"

---



# நோய்க்கு இடங்கொடேல்

## வாழைப்பழம் இனிப்புள்ள இயற்கை மருந்து!

**தெ**ன்னையும் — வாழையும் வீட்டுத் தோட்டத்து பயன் மிகு மரங்கள். வாழையைப் பொறுத்த அளவில் அதன் பயன்கள் பலப்பல. உபயோ கப்படாத பாகமே வாழையில் இல்லை எனலாம்; வாழை இலை யிலிருந்து பழம்வரை எத்தனை விதங்களில் — வாழைப்பூவும், வாழைக்காயும், வாழைப் பழ மும் உபயோகப்படுகின்றன— என்பதைத் தமிழர்களுக்கு விளக்க வேண்டிய அவசியம் இல்லை.

ஆயினும், வாழையின் அபூர்வமான உபயோகங்கள் பொது மக்களுக்குத் தெரிந் திருக்க நியாயமில்லை.

வாழைக்காயிலிருந்து பொறி யல், பொடிமாஸ், வறுவல், சிப்ஸ் போன்ற பண்டங்கள் தயாராவது அனைவருக்கும் தெரியும். ஆனால் அதே காயி லிருந்து 'வாழை மாவு' தயாரிக் கப்படுவதும், அதில் சிறந்த ஊட்டச் சத்து செறிந்திருப் பதும், இதிலிருந்து தயாரிக் கும் கஞ்சி குழந்தைகளுக்கு ஏற்ற நல்ல ஆரோக்கிய உணவு என்பதும் பலருக்குத் தெரியாது. இந்த மாவி லிருந்து அருமையான சேமியா தயாரிக்கலாம். அதுமட்டுமல்ல, வயிற்று உபாதைகளால் அவ திப்படுகிறவர்களுக்கு வாழை மாவுக் கஞ்சி நல்ல உணவு!

இன்னொரு அரிய தகவல். வாழைப் பழம் சாப்பிடுவதற்கு ருசியுள்ள பண்டம் மட்டுமல்ல; சத்துள்ளது மாத்திரம் அல்ல; மருந்துக்குணங்களும் வாழைப் பழத்துக்கு உண்டு. "வாழைப் பழம் — ஒருவித மருந்தா?"— என்ற வியப்பு மேலிடுகிறதா? ஆம்! இனிப்புள்ள சுவையான மருந்து! அது எப்படியா?

வாழைப் பழத்துடன் உப் பையும்—புளியையும் சேர்த்து உட்கொண்டால், வயிற்றுப் போக்கு நின்றுவிடும். வாழை யில் ஒருவித சாம்பல் சத்து இருக்கிறது. அது வயிற்றில் உள்ள அமிலத் தன்மையைச் சமன் செய்யக் கூடியது.

தோலில் வெடிப்பு, ஆஸ்துமா, அஜீரணக் கோளாறுகளால் வருந்துகிறவர்களுக்கு வாழைப் பழம்—சிறந்த உணவு வாயு ரோகம் இரப்பைப் புண், பெருங்குடல் நோய் ஆகிய கோளாறுகளை வாழைப்பழம் நிவர்த்திசெய்யக் கூடியது. வாழையிலுள்ள சத்து குழந் தையின் பற்களைச் சொத்தை விழாமல் பாதுகாக்கும் வாழைப் பழத்தை உண்டுவந்தால், மலச் சிக்கல் குறையும். மூல வியாதி யின் உபாதைகளை வாழைப் பழம் ஓரளவு குறைத்துவிடக் கூடியது; பெரியம்மைபோன்ற நோயினால் வருந்துகின்றவர் களுக்குப் பேயன் போன்ற பழங்களைத் தருவது வழக்கம். இந்தப்பழம் உடல் உஷ்ணத்தை குறைத்து நோயைக் குணப்படுத்தும்; வயிற்றிலும் வாயிலும் புண்கள் ஏற்பட்டி ருக்குமானால், அதைக் குண மாக்கும்.

வாழைத் தண்டிலுள்ள சத்து அரியதொரு மருந்து. வாழைத் தண்டை உணவாகப் பயன் படுத்தினால் குடலைச் சுத்தம் செய்யும். குடல் பாதையில் அடைத்து நிற்கும் கல்போன்ற வற்றை அப்புறப்படுத்தி ஜீர ணப் பாதையைச் சுத்தம் செய் யும்; அஜீரணத்தைத் தடுக்க வல்லது. வாழையின் வேரிலி ருந்து கிடைக்கும் 'டானின்' என்ற சத்து, ரத்த சேதத்தை தடுக்கக் கூடியது; வாய்ப் புண்ணை ஆற்றும் சக்தி உடை யது.

இவை எல்லாம் ஒரு புறம் இருக்கட்டும். வாழை நார் எதற்கு உபயோகப்படும்? 'பூ கட்டுவதற்கு', "வெற்றிலைக் கவளிகட்டுவதற்கு" என்பதற்கு மேல் நம்மால் நினைக்க முடி கிறதா? வாழை நாரிலிருந்து ஆடைகளை நெய்து, தயாரிக்க முடியும்!

பொதுவாக, மக்களுக்குத் தெரிந்திராத எத்தனை விதங் களில் வாழை பயன்படுகிறது பார்த்தீர்களா?

மனித வாழ்வுக்கு இத்தனை வகைகளில் பயன்பட்டு வாழ வைப்பதால் போலும், இதற்கு 'வாழை' என்ற பெயர் அமைந் திருக்கிறது!

நன்றி; **'நிலவளம்'**

# கலைஞர் பதில்கள்

கே:- உலகத்தில் நிலையானது எது?

ப:- உலகமே நிலையானது அல்ல என்கிறதே வளர்ந்து வருகிற விஞ்ஞான அறிவு!

கே:- மனச்சாட்சிக்கும் இறை உணர்வுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமை என்ன?

ப:- மனச்சாட்சியில்லாத இறை உணர்வுக்கு மதிப்பேயில்லை, இறை உணர்வு இல்லாமல் மனச்சாட்சி கூட இருக்கலாம். ஆனால் மனச்சாட்சியில்லாத இறையுணர்வு வெறும் வேடமே!

கே:. அறிஞர் அண்ணா அவர்கள் ஆரம்பத்தில் கம்பராமாயணம் பற்றிக் கொண்டிருந்த கருத்தை பிற்காலத்தில் மாற்றிக் கொண்டார் என்று கூறப்படுவது உண்மையா?

ப:- கம்பனின் தமிழ் வளத்தை எப்போதுமே அண்ணா அவர்கள் பாராட்டத் தவறியதில்லை; அந்தக் கதையில் வரும் கதாபாத்திரங்களைக் கடவுள் அவதாரமாக ஆக்கியதை அண்ணா ஏற்றுக்கொண்டது இல்லை!



கே:- காந்தீயத்தில் தாங்கள் கண்ட கவர்ச்சிஎன்ன?

ப:- வன்முறையைத் தவிர்த்து அறவழியில் நடத்தும் உரிமைப் போர்தான், காந்தியடிகளின் நெறியாக இருந்தது; அதுவே வெகுவாக என்னைக் கவர்ந்தது.

கே:- சமயச் சொற்பொழிவாளர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப:- அவர்களில் சிலர் சமயத்திற்கேற்ப சொற்பொழிவாற்றுவதால் அப் பெயர் பெற்றனர் என்று நினைக்கிறேன்!

கே:: எழுதும் போதும் பேசும் போதும் நான் என்ற சொல்லைப் பயன் படுத்துவது 'நான்' என்ற முனைப்புக்கு அடையாளமா?

ப:- 'நான் நாளைக்கு உன்னை சந்திக்கிறேன் — நேற்று சொன்னபடி நான் வர முடியவில்லை — நான் நாவலருடன் பேசிக்கொண்டிருந்தேன் —' இப்படி எழுதும் போதோ பேசும் போதோ வருகிற 'நான்' என்ற சொல் முனைப்பிற்கு அடையாளம் அல்ல! "நான்தான் அதைச் செய்ய முடியும்," நானில்லாவிட்டால் எதுவுமே நடக்காது — "நானே எல்லாம்" — இப்படிக் குறிப்பிடுகிறபோது வரும் 'நான்' என்ற சொல்தான் ஆணவத்துக்கு, 'நான்' என்ற முனைப்புக்கு அடையாளம்!

கே:- தென்றலின் சுகத்தை எதற்கு ஒப்பிடலாம்?

ப:- தாய் மொழிக்கு!

கே:- இலக்கியத்தின் நலிவு ஒரு நாட்டின் நலிவு ஆகுமா?

ப:- மூளை நரம்புகளின் நலிவு என்ன விளைவைத் தருமோ அதே விளைவுதான் இலக்கிய நலிவினால் நாட்டுக்கு ஏற்படும்!

கே:- பகுத்தறிவுத் தந்தைக்குப் பெரியார் என்ற பட்டத்தை யார் அளித்தது?

ப:- 1937ம் ஆண்டு மகளிர் நடத்திய மாநாடு ஒன்றில் டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் அவர்கள் 'பெரியார்' என்ற பட்டத்தை வழங்கினார்கள்.

கே:- தாங்கள் தூங்குவதற்கு முன்பு எதை நினைத்துக் கொள்வீர்கள்!

ப:- மறுநாள் காலையில் உள்ள வேலைகளை!

கே:- ஸ்டாலின் பற்றிச் சில வரிகள் கூறுவீர்களா?

ப:- மார்க்ஸ் எழுதிய சித்தாந்தங்களை லெனின் செயல்படுத்தத் தொடங்கினார். ஸ்டாலின் அவைகளை நிலைநிறுத்தப் பாடுபட்டார்!

---

## ● பரிசுபெறும் கதை

சென்ற "ஆடி" சுடர் இதழில் வெளிவந்திருந்த சிறு கதைகளில் வல்வை அனந்தராஜ் எழுதிய 'அந்தச் சுவடுகள் அழிந்து கொண்டிருக்கின்றன.' எனும் சிறு கதை சுடரின் அன்பளிப்பாகிய ரூபா 25-00 பெறுகிறது.


* * * *

## ● அட்டையில்

ஆகஸ்ட் 26ம் நாள் தனது 49வது அகவையில் காலடி எடுத்து வைக்கும் ஈழத் தமிழினத்தின் இணையற்ற தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயல் அதிபருமான நாவலர் அ. அமிர்தலிங்கம் அவர்களின் எழிலார்ந்த தோற்றத்தை இந்த இதழ் சுடரின் முகப் போவியமாக தீட்டியிருக்கிறார் நமது ஓவியர் வி. கே.

---

குணத்திலும் மணத்திலும் சிறந்தது அண்ணு கோப்பி
எப்பொழுதும் அதையே பருகுங்கள்!




அண்ணு தொழிற்சாலை இணுவில்

## சுத்தம் சுகம் தரும்

### உங்கள் உடம்புத் தூய்மைக்கு

நீம் வாசனை சோப்,
எண்ணெய் முழுக்குக்கு
ஒலிவ் ஸ்நானப் பவுடர்.

### உங்கள் உடைத் தூய்மைக்கு,

மில்க்வைற் நீல சோப், நியூ மில்க்வைற் சோப்,
மில்க்வைற் பார் சோப், மில்க்வைற் சலவைப் பவுடர்.

### உங்கள் உறைவிடத் தூய்மைக்கு

நீம் சுகாதார தூபம்
இதைத் தணலில் இட்டுப் புகைத்தால்
ஈ, கொசு, நுளம்பு, சிலந்தி ஆகியவை அணுகா.

**மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,** யாழ்ப்பாணம்.






இப்பத்திரிகை 194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12ல் உள்ள சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டாரால் அதே முகவரியிலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.